ब्रह्मविद्या.

ப்ரம்மவித்யா பத்திரிகை.

மாதம் ஒருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

[illegible]

௨-ம் புத்தகம். } சிதம்பரம்:—சர்வஜித்து ௵ தை௴ ௧௯-உக்கு ௧௮௮௮ ௵ ஜனவரி௴ ௩௧-உ செவ்வாய்க்கிழமை. { இலக்கம்-௮.

[illegible]

விக்கிரகாராதனம்.

[முன் தொடர்ச்சி.]

எங்கும் நிறைந்த பரம்பொருளான தன்னைத் தனித்து ஓர் சிறு பிம்பத்தில் தியானிக்கின்றார்களாகையால், இவர்கள் அஞ்ஞானிகளென்று விக்கிரகாராதனை செய்வோரைக் கடவுள் கடிந்துகொள்வாரெனில், எங்கும் நிறைந்த கடவுளை ஓர் பக்கத்தில் நோக்கிப் பணிந்துகொள்ளும் மற்றவரையும் அவர் அங்ஙனமே செய்யத் தடையென்னே; அறிவேப! கருணாகரராய கடவுள் தமது தொண்டர்கள் செய்யும் குற்றங்களையெல்லாம் பொறுத்து அவர் வேண்டியவாறு அளித்து அநுக்கிரகிப்பவராதலால், அவர் தம்மைச் சிலாமயமான உருவத்தில் பூஜித்தது குற்றமாய்க்கொண்டு தமது தொண்டர்களைத் தள்ளிவிடுவாரா? அரணியைக் கடையும்பொழுது அங்கு நெருப்பு வெளிவந்தால் அதனால் தேயுவுக்குச் சர்வவியாபகம் [illegible]விடுமோ? கடவுள் பெரியோர் செய்யும் பாவனாசம்ஸ்காரத்தால் பிம்பத்தில் எழுந்தருளியதால் அவர்க்குச் சர்வவியாபகத்துவம் கெடுதலெங்ஙனம்? ஐயா, "எந்தச் சிலைகளை நாம் காலால் மிதிப்போமோ அதேவித சிலைகளைக் கடவுளென வணங்குவது எப்படி?" என்று எம்மை வினவும் இவர், காலில் மிதிக்கத்தக்க தோலைப் பதப்படுத்தித் தலைமட்டும் அங்கங்களுக்கு அலங்காரமாக்குவது என்ன மதிகொண்டோ? மனிதர்களுக்குப் பாவனையாற் சித்தியுண்டென்பது அவருக்கு எப்படித் தெரியும்? எவர்கள் பிம்பத்தை யாராதிக்கும் நம்மவரைத் தூஷிக்க முயன்றவருகின்றார்களோ, அவர்கள், நமது மாகனிமைதங்கிய இந்தியா சக்கரவர்த்தனியார் இராஜ்ஜியபாரத்தின் ஐம்பதாம்வருஷபூர்த்தி மகோற்சவத்தில், அவ்வம்மையின் ஓர் புகைப்படத்தை அங்கீகரித்துக் கனப்படுத்தி ஆசாரித்தார்களே. அது உசிதமாமோ? இதிலுள்ள பேத மிதவேயாம். தமது திருவுருவை இவ்வித்திய மகாஜனங்கள் ஆராதித்த சங்கதிகளைப் பத்திரிகைகளாலும் சில மனிதர்கள்முகத்தாலும் அறிந்து இந்தியர்க் கருள்புரிவாள் அவ்வம்மை. கடவுளோ தாம் சர்வஞானம் பொருந்தியவராதலால், எங்கும் நிறைந்துநின்று ஆங்காங்கு நடக்கும் ஆராதனைகளை நேரே ஏற்றுக்கொண்டு தொண்டர்களுக்கு அருள்புரிவார். அவரைப் பணித்தாலாவது துதித்தாலாவது அவர் கருணைமாரி

[illegible]

(விஜ்ஞாநசிந்தாமணி:)

वेदान्तसंग्रहः

(श्रीमदप्पय्यदीक्षितोपन्यासः)

[illegible]

பொழிவாராயின், அவனைப் பிம்பத்தினிடமாக ஆராதித்தால் அவ்வனஞ் செய்யாதொழிவரோ? ஆதலினால், இந்துக்களே! நமது ஆசாரமே மேலான கருத்துடன் அமைந்ததாக நம்புங்கள். நம்மவர்கள் கால்கள் பகவதாலயங்களை வலம்வருதலினால் புண்ணியம் பெறும். கைகளும் அத்திருவுருவின் பூஜைகளுக்கு மலர்கொய்தலினால் சாதகமாகும். கண்களும் அத்திருமேனியின் அமைப்பைக் கண்டு களிப்புறும். நிர்மாலியங்களை மோந்து மூக்கும் பாக்கியமடையும். செவிகளும் அக்கடவுளினது திவ்வியலக்ஷணங்களைக் கேட்டு மகிழ்வெய்தும். உள்ளமோ அவர் அடிக்கமலங்களில் பதியும். "பிரதிமைகளிலே கடவுள் தாம் நேரில் எழுந்தருளி இவர் செய்யும் ஆராதனைகளைப் பெறுகின்றாரென்பதற்குப் பிரமாணம் என்ன" என்று சிலர் வினவுகின்றனர். கடவுளின் உண்மைக்காரணங்களாற் பிறக்கும் சாஸ்திரமே பாவனுசம்ஸ்காரத்தால் பிம்பத்தில் கடவுள் அருள்பெறும் என்று காட்டியிருத்தலால், அதுவே அதற்குப் பிரமாணமாம். "பிம்பத்தே கடவுள் பரிபூரணித்திருப்பாராயின் தமது திருமேனியில் அணிந்திருக்கும் திருவாபரணங்களைக் கவரும் கள்வனை ஏன் அங்கே தண்டிப்பதில்லை" என்கின்றார்கள். இதுவும் ஓர் கேள்வியாமா! எவ்விடத்தும நிறைந்த பொருளாகிய கடவுள் தமக்கே நேரில் பாவஞ்செய்பவர்களைத் தண்டிப்பதில்லை; பின்பே தண்டிக்கின்றார் என்று இவரும் ஒப்புக்கொண்டிருக்கவில்லையா? பின்னும், நம்மவருள்ளே சிலர் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியையும், சிலர் பரமசிவமூர்த்தியையும், மற்றுஞ் சிலர் வேறுவேறு மூர்த்திகளையும் பூஜிப்பதால், இந்துக்கள் சாஸ்திரங்களில் விக்கிரகாராதனத்தைப்பற்றிச் சரியான ஓர் வழி இல்லை என்கின்றார்கள். இதுவும் பயனற்ற கேள்வியென்பதில் தடையில்லை. உலகத்தில் நாம் மேலே காட்டியவாறு முக்கியமாய்க் கடவுளை அவரவர் மனதிற் கிசைந்தபடி பாவிப்பதால் குற்றம் என்ன இருக்கின்றது. ஒரேவித சுவர்ணத்தை ஒருவர் கங்கணமாகவும், மற்றொருவர் வேறு ஆபரணமாகவுஞ் செய்தால், அவர் பூண்டது பொற்பணியன்றி வேறாகுமோ? பலவித வியாபாரங்களில் அழுந்துகிற்கும் நமது சிற்றறிவிற் கேற்ப நாம் இக்கலியுகத்தில் கடவுளைப் பிம்பத்தில் ஆராதனைசெய்வதே மிக உசிதமாம். அதுவே சாஸ்திரங்களின் கருத்து. இதுவிஷயத்தைப்பற்றி எமது ஸ்ரீராமாயணத்திலும் அகலிகை சாபமோக்ஷப்பிரகரணத்தில் ஓர் சுலோகம் உண்டு. அதன் கருத்து "தருமசீலராகிய பெரியோர் தாம் சாஸ்திரங்களின் கருத்துக்கிசையச் செய்யும் கிரியையால் சிலையேயாயினும் தடையின்றிக் கடவுளின் தன்மையைப் பெறும்" என்பது. ஆதலால், விக்கிரகாராதனத்தை நிந்தித்தல் யுக்திக்கும் அனுபவத்திற்கும் விருத்தமாதலால், அதை வீண்வம்பெனக் கொள்க.

[மொழிபெயர்ப்பு.] சுந்தரராஜசர்மா.

வி- சி- ணி.

வேதாந்த சங்கிரகம்.

அப்பயதீக்ஷிதர் உபந்யாசம்.

[௫௩- பக்கத்தொடர்பு.]

மேலும், சாலோக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம், சாயுச்சியம் என்னும் நால்வித்முத்திகளிலும் வேறாய் ஐந்தாவதான கைவல்யமுத்தி இருவகைப்பட்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகிற்

[illegible]

கும். கிரமமுத்தி ஒன்று; உடன் முத்தி ஒன்று. அவற்றுண் முதன் முத்தியாகிய கிரமமுத்தி "வேதாந்தங்களை யறிந்து மெய்ப்பொருளுணர்ந்து சந்நியாசத்தாற் சத்துவகுணம் மேலிட்ட எதிகள் பிரமலோகஞ் சென்று பிரமனுடன் முத்தியடைகின்றனர்கள்" என்றும், "ஹிருதயத்தில் நூற்றொரு நாடிகள்" என்றும் போந்த வசனங்களால், பிரமலோக கிரமமாய்ப் போகும் வழியால் கிடைப்பது. இரண்டாவதோ "இவ்விடமே பிரமத்தை யடைவான்" "இவ்விடமே உண்மையிற் கலப்பன்,, என்றற்றொடக்கத்த வசனங்களாலும், இச்சரீரமிருக்குங்காலத்தே பரம்பொருளை யறிவானேல்" எனப் போந்த வசனத்தாலும் வெளியாகின்றபடி, உயிருடனுள்ள காலத்திலேயே உண்டாவது. இப்படிப்பட்ட ஜீவன்முத்தியை விசிஷ்டாத்வைதிகளும், துவைதிகளும் ஏன் ஒப்பிலரெனில், பிரமநிஷ்டர்களிடத்தும் பல விவகாரங்களிருத்தலால் அவ்விடம் அவருக்கு முத்தியுண்டென்பது உபசாரமொழியென்று அவர் கொள்கையாம். "சாக்ஷியும், சேதனனும், தனித்தவனும், நிர்க்குணனும்,, என்றும், "அம்சமற்றது, தொழிலற்றது, சாந்தமாயுள்ளது, மாசற்றது, பற்றற்றது,, என்றும் தொடங்கிய பல வசனங்களுக்கு உண்மையிற் குணமுள்ள வஸ்துவே பொருளெனக்கொண்டு நிர்க்குணமான வஸ்து இல்லையென்று சொல்லுவது போல், தம்மதிகாரத்திற்கேட்டாத ஜீவன்முத்தியையும் விரும்பாதொழிந்தார். இதனால் அவர் அறிவில்லாதவரென்று சொல்லப் பொருந்தாது. சில அத்வைதிகளும் "அவன் அங்கு செல்வான், உண்பான், கிரீடைகளைச் செய்வான், தோழர்களுடன் கூடுவான்,, என்பதாதிய வேதவாக்கியங்களைப் பிரமலோகத்தே யனுபவிக்கும் போக விஷயங்களாக அர்த்தங்கொள்ளாது இவ்விடத்தே கிடைக்கும் ஜீவன்முத்தியே அதற்கும் பொருளெனக்கொண்டு, ஒருவித விதிவிலக்குகளுமின்றி, மனம்போன வழி திரிகின்றார்கள். இவர்போன்ற அத்வைதிகளைச் சீவன்முத்தர்களென்னும் பதப்பொருளென்றெண்ணிப் பிறர் பரிகசிப்பின், அவருக்குப் புத்திக்குறைவு யாதிருக்கின்றது. உலகத்திலே "எவனைக்கண்டு உலக மஞ்சாது, எவன் உலகத்திற்கஞ்சான், எவன் மகிழ்வு, அழுக்காறு, அச்சம் என்பவைகளை நீத்தவன், அவன் ஜீவன்முத்தன்,, என்று தொடங்கிய பல வசனங்களால் ஏற்படும் ஜீவன்முத்தியை இல்லையெனச்சொல்ல எவராலும் முடியாது. ஜீவன்முத்தனுக்கு விவகாரங்களிருப்பினும், கொளுத்திய வஸ்திரமும், வெதுப்பிய வித்தும்போலத் தோற்றமாத்திரையாயிருப்பினும் புனர்ஜன்மத்திற்குக் காரணமாகாது. அவன் இவ்வுடலையொழித்து வேறு உலகங்களுக்குச் செல்வதுமில்லை. அவனுடைய உயிர் அங்ஙனமே நிரடஸ்தமாய் நின்றுவிடுகின்றதெனப் பெரியோர் கருத்தென்க. இங்ஙனமிருக்க, "அவன் பிதுர்லோகத்தை விரும்பினால், அவன் இச்சைக்கிணங்கிப் பிதுர்கள் அங்கேதோன்றுவார்கள்,, என்று தொடங்கிய வசனத்தால், பிரமலோகத்தையடைந்த முத்தனுக்கும் அணிமாதி அஷ்டசித்திகளிருந்தனவென்று வெளியாகின்றமையால், இங்குதானே பிரமநிஷ்டனாகலாம். பிரத்தியக்ஷ பலங் கிடைப்பதால் ஜீவன்முத்தியை உண்மையென்றொப்புவோம். பிரமநிஷ்டர்களிடத்தில் ஓர்வித சித்தியையுங் கண்டிலேம். முற்காலத்தில் வசிஷ்டர்முதலாயினோரிடத்து அணிமாதி சித்திகள் காணப்படுதலால், அவர்கள் ஜீவன்முத்தரென்றே சொல்லுவோம். சித்திகளன்றோ முத்திக்கிலக்கணம். யாதொரு சித்திகளுமின்றி ஒருவன் பிரமநிஷ்டனென்றால், அதனு

[illegible]

[illegible]

[illegible]

ல் முக்தி கிட்டுமோ. முத்தியோ சகுணனாகிய ஈசுரனருளின்றிக் கூடா. ஆதலால், சகுணனான ஈசுரனை வழிபடுதல் மோகம் முதலியவற்றை வெறுத்துநிற்கும் அத்வைதிகளுக்கு முத்தியுண்டோ. அவர்களுக்கு வார்த்தைகளின்மாத்திரம் முத்தியுண்டேயன்றிக் காரியத்திலில்லை,, என்கின்றார்கள். அவர்களுக்கு நாம் அளிக்கும் விடையாவது,—ஜீவன்முத்திக்கு அணிமாதி சித்திகள் இலக்கணங்களாகா. சமதம முதலிய குணங்களே அதற் கிலக்கணங்களாகும். வசிஷ்டராதியோ ரதிகாரிகளாதலால் அவரிடம் சித்தியும் முத்தியுங் கூடிற்று. அவர் முற்பவத்திலே சகர்மம், நிஷ்கர்மமென்னும் இருவகைத் தவங்களைச் செய்தவர். நிஷ்கர்மமென்னும் ஓர்விதத் தவத்தையே செய்தவர்களுக்குச் சித்திகளில்லா முத்தியே யுண்டாகும். சித்திகளோ, அநதிகாரிகளுக்கு மோக்ஷவிரோதமே. அன்னபூர்ணோபநிடத்து முதலிய உபநிடதங்களில், முத்தர்களுக்குச் சித்தியில் விருப்பமிராதென்பது வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருப்பதால், மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்கள் பிரமத்தை விசாரித்தல்வேண்டும். பூமியிலே செய்த புண்ணியங்களின் பலத்தை அவன் பிரமலோகத்தி லனுபவிப்பான். ஆதலினுற்றான் அவன் உடன்முத்தி பெற்றவனல்லன். சில பெரியோர்கள் காலங்கழித்துவருவதாலும், சுகதுக்காதி சம்பந்தமுள்ளதாதலாலும் கிரமமுத்தியினு முடன்முத்தியே சிரேஷ்டமெனக்கொண்டு அதற்கென நிர்க்குணத்தியானஞ் செய்துவருகின்றார்கள். ஓர் சமயம் ஏதேனுஞ் சங்கற்பத்தால் ஓர் சித்திஉண்டாயின, அது தமது நிஷ்டைக்குக் குறைவெனத் தமது சக்தியை வெளியிடார். இப்பொருளே பிரமசூத்திரங்களில் அடங்கியிருக்கின்றது. ஆதலால், யாதொரு சித்திகளுமில்லாமல் சமஸ்த விஷயவியாபாரங்களுமொடுக்கிப் பிரமநிஷ்டையடைந்தவனுக்கு உடனே சம்சாரபந்தம் விடுமாதலால், ஜீவன்முத்தியுண்டென்பதே துணிபாயிற்று. வரும். [மொ—பு]

"ப்ரம்மவித்தியா" பத்திராதிபரவர்கட்கு வந்தனம்.

ஐய!

தங்கள் பத்திரிகையில் "விதண்டாவாதம்,, என்னும் பதம் சில சமயங்களில் உபயோகிக்கப்பட்டு வருவதைப் பார்க்கின்றேம். அஃது சைவவைஷ்ணவர்களுக்குள் நடக்கும் விவகாரத்தைக் குறிக்குஞ் சந்தர்ப்பங்களிலேயே உபயோகிக்கப்பட்டு வருகிறது. அதில் யாந் தெரிந்துகொள்ள விரும்பும் விஷயங்கள் இரண்டுள: க. விதண்டையென்னும் பதம் எந்தத் தாதுவினின்றும் பிறந்தது? அந்தத் தாதுவுக்கும் அப்பதத்திற்கும் சரியான [Litteral] அருத்தம் யாவை? உ. விதண்டாவாதம் என்னும் பதம் சைவவைணவரது சம்வாதத்திற்கேதா னுபயோகிக்கப்படல்வேண்டுமோ? ஆமெனில், என்ன நியாயத்தால்? இவற்றிற்குத் தாங்களாவது, அல்லது, விதண்டையென்னும் பதத்தைப் பிரயோகிக்குந் தங்கள் கடிதக்காரர்களாவது தயை செய்து பதில்விடுத்து உபகரிக்க வேண்டுகின்றனம்.

ஈரோடு. தினகரன்.

ஒருவர் எழுதுகிறார்,—ஐயா! நமது இந்தேசத்திலுள்ள ஜனங்களிலும் அதிகமாய் ஐரோப்பாதேசத்திலே பல நியாயஸ்தலங்களில் ஸ்திரீபுருஷர்கள் வாதியும் பிரதிவாதியுமாயிருந்து ஒருவர் மற்றொருவர் குற்றங்களை எடுத்துக்காட்டிப் பெண்களுக்கும் புருஷர்களுக்குமுள்ள விவாகசம்பந்தத்தை நீக்கிவிடும்படி

[illegible]

கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஐரோப்பியர்களைப்போல் இத்தேசத்தவர்களுள் மனைவியைத்தள்ள விரும்பும் புருஷர்களும், புருஷர்களை நீக்க விரும்பும் பெண்களும் பெரும்பாலும் நியாயஸ்தலங்களில் வருவதைக் கண்டிலேம். ஆதலால், ஐரோப்பியர்களில் ஸ்திரீபுருஷர்களுக்கு ஒற்றுமைகுறைவு உண்டாகத்தக்க பல ஏற்பாடுகள் இருக்கின்றமையால், அது ஊகிக்கத்தக்கதாகவேயிருக்கின்றது. அநேகமாய் ஒருவர்க்கொருவர் மனவெறுப்புண்டாகும்படியான பலகாரணங்கள் பிரத்தியக்ஷமாகவுங் காணலாம். அவற்றுள் முக்கியகாரணம் ஸ்திரீகளும் புருஷர்களும் ஒருவர்க்கொருவர் பல அபிப்பிராயங்களில் வேற்றுமையை வகித்திருப்பதே. பாருங்கள், அவர்கள் தேசவித்தியாசத்தைக் கவனிப்பதில்லை. உள்மதவேற்றுமைகளை யோசிப்பதில்லை. புருஷர்களும் பெண்களும் விவாகஞ்செய்துகொள்ளும் விஷயத்தில் அவர்கள் பாஷையின் வேற்றுமைகளையும் பார்ப்பதில்லை. அவர்களில் ஆங்கிலேயர்களான புருஷர்கள், ஆங்கிலேயதேசத்தவளாயினும், பிரான்சுதேசத்தவளாயினும், ஜர்மனிதேசத்தவளாயினும், அன்றி மற்றெத்தேசத்தவளாயினும் பெண்ணென்றால் அவளை விவாகஞ்செய்து கொள்ளுகின்றனர். தாம்புரோடெஸ்டாண்டுக் [Protestant] கிறிஸ்தவனாயினும், கத்தோலிக்கக் [catholic] கிறிஸ்தவப் பெண்ணை மணம்புரிவான். இந்துக்களோ, அவ்வவ் மதஸ்தர் அவ்வம்மதப் பெண்களையும், உள்நாட்டு வேற்றுமைகளை உற்றுநோக்கி அவ்வவ் நாட்டவர்கள் அவ்வவ் நாட்டுப் பெண்களையும் விவாகஞ்செய்து கொள்ளுகிறார்கள். அதுகொண்டே இந்துதேசத்து ஸ்திரீபுருஷர்களுக்குத் தாம் பிறந்த தேசத்தாலேனும், தாம் கொண்ட மதத்தாலேனும், தமது தொழிலாலேனும், வழக்கச்சொற்களாலேனும், உண்டிகளாலேனும், உடைகளாலேனும் வேற்றுமை ஏற்படுவதில்லை. அவ்விதமே அவ்வவர்க்கேற்றபடி நல்லொழுக்கமுதலிய நறகுணவிலட்சணங்களாகிய அகவிலக்கணங்களும், உடைதரித்தல் முதலிய புறவிலக்கணங்களும் அமைந்திருக்கின்றன. அவர்கள் ஓரோயிடத்தில் வசிப்பவர்களாதலால் அதிகமாய் ஒருவரைவிட்டொருவர் பிரிய நேரிடுவதில்லை. அன்றியும், உசிதமான வயதையும் எதிர்பார்த்து விவாகம் செய்யப்படுவதால் ஒருவருக்கொருவரா லியலாத வயோதிபவித்தியாசத்தா லுண்டான துக்கமும் நேரிடுவதில்லை. பொருளல்லவோ பெருங்கலகத்தை விளைவிக்குங் கருவி. ஆங்கிலேயர்களுள்ளே விவாகஞ்செய்துகொண்டவுடன் பெண்களின் பொருள் புருஷர்களைபடையாது அவரிடமே சுதந்தரித்திருக்கும்படி நேரிடுகின்றது. இந்துக்களிலே கணவனுடன் வாழும் பெண்களுக்கு ஒருபொழுதும அவ்வித சுதந்தரங் கிடைப்பதரிது. ஆங்கிலேயர்களுள் விவாகமான பெண்களும் தாமே தம்பொருள்கொண்டு தப்வ்வகாரத்தை நடத்திவரக்கூடும். இந்துக்களிலோ, புருஷர்களே பெண்களைப் பரிபாலிப்பது அவசியமாயிருக்கின்றது. அதுகொண்டே இந்துதேசஸ்திரீகள் புருஷர்களிடம் அன்பு கௌரவம் முதலியவற்றை முக்கியமாய்ப் பாராட்டநேரிடுகின்றது. ஆங்கிலேயர்களுக்குள் அவ்விதமில்லாமையால், அந்தப்பாகங்கள்மட்டில் குறைந்திருக்கக்கூடும். இத்தேசத்து ஸ்திரீகளுக்குப் புருஷன்வசமாயிருத்தல் தொன்றுதொட்டு நடந்துவரும் தர்மமென்றெண்ணி, அவரது ஆணைக்கடங்கியே நடந்துவருகிறார்கள். ஒருசமயம் தமக்கு விரோதியாய கணவன் அமைந்தாலும், அவனுக்கு விரோதமாய் ஸ்திரீகள் செய்யத்துணிவதில்லை. புரு

[illegible]

ஷர்களும் வைதிககாரியங்களிலும் மற்ற லௌகிககாரியங்களிலும் அவர்களுடன் கூடவேயிருந்து வேலைகளை முடித்துவருகின்றார்கள். இவ்விதம் இம்மையிலும் மறுமையிலும் பூர்ணசுகத்தை யளிக்கவல்ல விவாக ஏற்பாடு இந்துக்களுக்கு அமைந்திருக்கின்றதேயன்றி, மற்றவருக்கு இல்லை. மற்றவருள் ஒருவனை விவாகஞ்செய்த ஓர் பெண், ஒருசமயம் வேறொருவனை விவாகஞ்செய்வாள். அவ்வித வழக்கம் இந்துக்களுள்ளே மிகவும் குறைந்தது. அல்லது இல்லையென்றே சொல்லலாம். ஒருவர்க்கொருவர் விவாக உடன்பாட்டைக் கடந்து வியபிசரிப்பராயின், மேற்றிசையாரினும் இத்தேசத்தாருக்குக் கடிய அபவாதங்களுண்டு. மேலும், இந்துக்களுக்கு இவ்விவாகமென்னுந் தொழில் மேற்றிசையார் கொள்வதுபோ லில்லாமல், வெகு திரவியத்தால் முடியவேண்டியதாக விருக்கின்றது. ஆகையால், இவ்வித விவாகசம்பந்தத்தை விலக்கிக்கொள்ளுதல் மிகுந்த பொருட்செலவுக்குக் காரணமாகின்றது. ஐரோப்பியர்களுக்குள் விவாகம் நிச்சயிப்பது, காதல் குடிகொண்டு கலாகடந்த காமமார்க்கங்களிற் செலுத்தும் பல குற்றங்களுக்கு இடமான யௌவனவயதிலுள்ள உலகநடவடிக்கைகளிற் றேறு வாலிபரும் மாதருமே. இந்துக்களிலோ, உலகநடவடிக்கைகளிற் றேர்ந்து குணகுணங்களைப் பகுத்தறிய வல்ல பெரியோர்களால் விவாகம் நிச்சயிக்கப்படுகின்றது. மேலும், இந்துக்களுக்கு ஐரோப்பியர்களினும் அதிகமாய்த் தமது குணங்களைக் காக்கப் பெண்களையே நம்பவேண்டியிருக்கின்றது. ஐரோப்பியர்களோ, மனிதனெனப் பிறந்த எவரைக்கொண்டாவது அக்காரியத்தை நிறைவேற்றுகின்றனர். உலகத்திலே கலகம் அதிகமாவதற்கு மதுபானமே ஓர் பெருங் காரணமன்றோ? அவ்வித மதுபானத்தில் மற்றைய தேசத்தவர்களைக்காட்டிலும் இத்தேசத்தவர்கள் வெறுப்புள்ளவர்களென யாவரும் நன்றறியக்கூடும். பெண்களுள் அவ்வித வழக்கம் சிறிதுமின்றென்பதற்கையமில்லை. இவ்விதம் குணநிறைந்த நம் மதாசாரங்களைக் கெடுப்பது உசிதமுமன்று; சாத்தியமுமன்று. இவைகள் மாற்றப்படுமாயின், நம் தேசத்திலுள்ள அபூர்வமான விவாக மரியாதையும் கெட்டுப்போய்விடும். அந்தோ! இத்தேசத்திலே சில சீர்திருத்தங்களைச் செய்வதாக வெளிவந்த சிலர், தாமேதோ மேற்றிசையார் கருத்திற்றியைந்து குணம் நிறைந்த நமது குலாசாரங்களை மாற்ற முயன்று, நன்மரத்துப் புல்லுருவிகளாகின்றார்களே! என்செய்வோம்!!

ஈரோடு. ஆரியமதபதுமானி.

(மொழிபெயர்ப்பு.)

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்; ௧௮௮௮ஆ ஜனவரிமீ ௩௧-௨ செவ்வாய்க்கிழமை

ஸம்ஸ்கிருதபாஷை.

இராமாயணம். [முன்தொடர்பு.]

இவ்விராமாயணத்தில் மற்றைய புராணங்களிலுள்ள விவாதத்தைப்போல் பிரமாணத்தன்மையைக் குறித்து இந்துக்களுக்குள் எவர்க்கும் ஓர் விவாதமுமில்லை. ஆயினும், இதற்கு உண்மைப்பொருளென ஒவ்வொன்றை ஒவ்வொரு சார்பார் கூறி

𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌵𑌿𑌮𑌰𑍍𑌶𑌃.

𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌭𑌾𑌷𑌾. 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌂

[illegible]

வர். இத்தேசத்தில் பிரசித்திபெற்றவர்களான இராமாநுஜாசாரியமதஸ்தர் விபீஷணன் செய்த சரணாகதியை வழியாகக் கொண்டு அதையே வெளியிடவந்தது இராமாயணமெனவும், வேறுசிலர், சர்வலோகநாதனான ஸ்ரீமந்நாராயணனது மகிமையை இஃது விளக்குமெனவும், மற்றுஞ்சிலர், காவியங்களிலே சிறந்ததான இக்கிரந்தத்திற் சொல்லப்படும் கதைகளினும் மேலான குறிப்புப்பொருளொன் றிருக்கவேண்டுமாதலால், வெளிப்படையாக இராமாயணத்தில் வெளிவரும் ஸ்ரீமந்நாராயணமான்மியத்தினும் மேலான பரமசிவமான்மியமே இதில் அடங்கியிருக்கின்றதெனவும் சொல்லுகின்றனர். காவியங்களை அறிந்த சிலரோ, உலகமனைத்தும் புகழுந் தகைமைபெற்ற குணங்களுக்கு உறைவிடமும் மகாநாயகனுமான ஸ்ரீராமனை யாசிரயித்து ஒன்பது ரசங்களும் இதிற் றெள்ளென விளக்கப்படுமெனவும், அவற்றுள்ளும் "இரகுவரனுடைய சரித்திரம் பௌலஸ்தியவதமெனப் பெயரியது,, என்றிருப்பதால், இதில் வீரரசம் பிரதானமெனவும் மற்றையவை அங்கமெனவும் சாற்றுகின்றனர். இவ்விதம் பற்பல மதஸ்தர்களாற் பற்பலவிதமாய்க் கொள்ளப்பட்டு அனைவருக்கு மானந்தம் விளைவிக்கு மிப்புத்தகம் அற்புதமான அமைப்புடன் கூடியதென மீட்டுஞ் சொல்லவேண்டுமோ. இதனை முற்றிலும் படிப்பவர்க்குச் சம்ஸ்கிருதபாஷையின் சிறப்பும், ஏனைய பாஷைகளிற் காணக்கூடாத அருமையான அலங்காரங்களும், முற்காலத்து இந்துக்களின் நடைகளும், அக்காலத்துப் பட்டணங்களின் தன்மைகளும், அரசர்களின் தர்மங்களும், துர்ஜனர்களின் கொரேதன்மையும், பாவமானது மிகுந்த கேட்டை விளைவிக்குமென்பதும், ஸ்திரீகளின் தர்மமும், பற்பல நீதிகளும் மனத்திலே உறுதியாய் நிலைபெறுமென்பதிற் றடையில்லை.

அப்புத்தகத்திலுள்ள பல பிரகரணங்களால் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் பலவுள. அவைகளை அடியில் வருமாறு காண்க. முதலில் அயோத்திபட்டணத்தை வர்ணித்தலாற் பட்டணங்களைக் காக்கும் வழியும், தேசத்தைச் செல்வம் பெருக முக்கியகாரணமான வியாபாரமும், நாஸ்திகன், பொய்யன் முதலியவர்களை அரசர்கள் ஆளவேண்டிய வழியும், சிற்பிகள் அதாவது கைத்தொழிலாளர்கள் இருப்பது நகரச்சிறப்பென்பதும், சைனியங்களை ஆதரித்தல் அரசர் தர்மமென்பதும் வெளியாகின்றது. பிறகு தசரதர் ஆலோசனை செய்யுமிடத்திலுள்ள கலைக்கோட்டுமாமுனிவர் கதையால் வித்தையின் கௌரவம், ஞானத்தின் மேன்மை, தைரியமும், சாஹஸமும் பெண்களுக்குரியதென்பதும் மங்கையின் மாயவலையில் மாமுனிவர்களுஞ்சிக்குவார்களென்பதும் அரசர்கள் அமைச்சருடன் கலந்து ஆலோசிக்கவேண்டிய முறைமையும் புலப்படும். அசுவமேதப்பிரகரணத்தாற் சூரர்களுடைய தொழிலும், ஸ்ரீமந்நாராயணனைக்கண்ட படலத்தால் கடவுளுடைய கருணையால் கடுமையான ஆபத்துகளைத் தாண்டலாமென்றும், விசுவாமித்திரமுனியின் வரவை வர்ணித்தலாற் பிள்ளைகளினிடம் பெற்றோர்களின் அன்பும், பெரியோர்களுடைய சொல்லின் நம்பிக்கையும், பெரியோர்கள் காரணமின்றிக் கருணைபுரிவார்களென்பதும், அறிஞர்களுக்குமோர் ஆசாரியன் வேண்டுமென்பதும், தாடகையைவதைத்த படலத்தால், லோகோ உபத்திரவஞ்செய்பவர்களிடம் ஒருவிதத்திலுங் கருணை கூடாதென்பதும், விசுவாமித்திரர் சொல்லிய பலகதைகளால் பற்பல நீதிகளும், வில்

[illegible]

முறித்த கதையால் நாயகனிடம் அமைந்த நற்பெரும் வீரியமும், உசிதமான விவாக சம்பந்தமும், பரசுராமகர்வபங்கப்படலத்தால தமது தொழிலைக்கடந்து போர் முகத்தில் நிற்பவரிடம் வர்ணாசிரம தர்மங்களைப்பாராட்டுவது அநாவசியகமென்பதும், விசுவாமித்திரர் விடைபெற்றுச் சென்ற கதையால் பெரியோர்கள் பரோபகாரஞ்செய்வது உசிதமெனவும், சீதையின் சரித்திரத்தைச் சிறப்பித்தலால் சிற்சில ஸ்திரீதர்மங்களும் பாலகாண்டத்தி லடங்கி யுள்ளன. அயோத்தியா காண்டத்திலோ தொடக்கததில் தசரதர் மந்திராலோசனை செய்த படலத்தால் சபைகளினிலக்கணமும், அவைகளை நடத்தும் வழிகளும், கைகேசியின் கதையால் சபத்தினிகளிடமும் அவர்களின் குழந்தைகளிடமுமுள்ள குரூரத்தன்மையும், சத்தியசந்தனுக்கும் ஓர் சமயம் தமது சொல்லை நிர்வகித்தலாலுண்டாகும் கஷ்டமும, பெற்றோர் வார்த்தையைக் காத்தல் பிள்ளைகளுடைய கடனென்பதும், லட்சுமணன் வனவாச சங்கற்பத்தால், உடன்பிறந்தவர்கள் ஒருவர்க்கொருவர் நேசித்தலும், சீதா ராம சம்வாதத்தால் அநேக ஸ்திரீதர்மங்களும், லட்சுமண சுமுத்திராசம்வாதத்தால் ஞானவதிகளாகிய தாய்களின் தன்மையும் நடைகளும், கௌசல்ய ரக்ஷைசெய்த சரித்திரத்தால் பெண்களுககுப் பிள்ளைகளிட முண்டான பேரன்பும், இராமன் கானகத்திற்கேகிய படலத்தால் ஜனங்களுக்கு இராஜவம்சத்திலுள்ள பக்தியும், குகனைக்கண்ட படலத்தால் சிநேகத்தின் தன்மையும் பிரதிஞ்ஞையை நிறைவேற்றும் வன்மையும், சித்திரகூடத்தை யடைந்த கதையால் பெரியோர்கள் வார்த்தையை அநுஷ்டிக்கும் வழியும், பரதன் சரித்திரத்தால் இராஜதர்மம், சகோதரவாஞ்சை முதலாயினவும், ஜாபாலிமுனிவர் சரித்திரத்தால் உபாயங்களின் உண்மையும், பரதனைத் திருப்பியனுப்பிய சரித்திரத்தால் ஸ்திர புத்தியின் சுபாவமும், கானகம் புகுந்த கதையால் நாயகன் தைரியமும, இன்னும் பல விஷயங்களும் வெளியாகின்றன. ஆரண்ணியகாண்டத்திலும் பல மகரிஷிகளைக் கண்ட கதையால் தேசாந்தர சஞ்சாரத்தின் பலமும், சூர்ப்பனகியின் சரித்திரத்தால் அகாலத்தில் ஸ்திரீகளைத் தண்டிக்கும வழியும, கரவதைப்படலத்தால் யுத்த மரியாதையும், சீதையை அபகரித்த படலத்தால் காலவிபரீதத்தா லுண்டாகும் துரெண்ணங்களும், ஸ்திரீகளுக்குச் சமயத்திற்கொருவிதமாகப் புத்தி மாறுபடுதலும், மாயாவதிகள்செய்யுந் தந்திரங்களும், ஜடாயுவின் சரித்திரத்தால் பறவைகளிலு முள்ள வநேக தர்மமும், இராமன் விசனமுற்ற கதையால் தமக்கேற்ற களத்திரம் நீங்குதலாலுண்டாகும் துயரம் சகிக்கக்கூடாததென்பதும், ஜடாயுவைச் சம்ஹரித்ததால் உபகாரிகளுக்குப்பிரதியுபகாரஞ்செயவேண்டுமென்பதும், தென்னாட்டின் காட்டிற் புகுந்த கதையால் ஆபத்துக்காலத்தில் விடாமுயற்சி வேண்டுமென்பதும் தெற்றெனவிளங்குகின்றது. கிஷ்கிந்தாகாண்டத்திலோ சவரியைக்கண்டகதையால் பெண்களுககும் பெரியோர்கள் சகவாசத்தாலுண்டாகும் பேறறிவின் பெருமையும், அநுமனைக்கண்ட படலத்தால் மேதாவியான மந்திரி செய்யவேண்டிய வேலையும் சுக்கிரீவனை சிநேகித்த படலத்தால் சிநேகமென்பது பெரும் பலமென்பதும், வாலிவதைப்படலத்தால் மித்திரகாரியத்தைச்செய்யும் வழியும், இலட்சுமணனைத் தூதனுப்பிய கதையால காதல் கொண்டவர் காரியத்தை மறப்பார் என்பதும், கபிகளையனுப்பியதால் அக்காலத்து பூகோளத்தினிருப்பும், சம்பாதி சரித்தி

[illegible]

ரத்தால் பட்சிகளிலும் சகோதரவாஞ்சையும், மகரிஷிகள் முக்காலமுமறிவாரென்பதும், சமுத்திரத்தைக் கடக்க வாலோசித்த படலத்தால் தற்புகழ்ச்சியில்லாதவன் வீரனென்பதும், இன்னும் பல நீதிகளும் வெளிப்பட்டிருக்கின்றன. அங்ஙனமே சுந்தரகாண்டத்திலும் தூதர்களின் தொழில், மந்திரிகளின் வேலை, காமுகனுடைய கரைகடந்த நடைகள், பதிவிரதைகளின் மஹாத்மியம், சத்துருக்களுக்குத் தூதகாரியமான தேஜோவதை, நல்லொழுக்கமுள்ளவர்களின் நடவடிக்கைகள், கொடுங்கோன்மன்னர்களின் அரசாட்சி, சிநேகிதர்களைத் தாண்டுதல், பிரபுக்களிடங் குற்றஞ்செய்தவர்கள் குற்றங்களை மன்னிக்கவேண்டும் வழி, காரியங்களை முடித்தவர் தமது கௌரவத்திற்கேற்ப அரசர்களிடம் பேசு மழகு, பெரியோர்கள் எவ்வித ஆபத்துக்காலங்களிலும் ஒரே நிலையுள்ளவர்களா யிருத்தல் வேண்டுமென்பதும ஆகிய இவையெல்லாம் முறையே வெளியிடப்பட்டிருக்கின்றன. யுத்தகாண்டத்திலோ இராசதூதர்கள் செய்யவேண்டிய வழிகளும், விபீஷணன் சரணாகதியடைந்த கதையால் இராஜதர்மங்களின் ரகசியமும், கருணையின் பெருமையும், அடுத்தவர்களிடம அன்பும், சேதுபந்த சரித்திரத்தால் மகான்களுக்கும் காரியவிஷயங்களில் பெருமையும், கீழ்மக்களுக்குத் தண்டமே குணங்கொடுக்குமென்பதும், யுத்தங்களை வர்ணித்தலால் பலவித யுத்தவழிகளும், சீதாதேவியைப் பரீட்சித்த கதையால் லோகாபவாதத்தில பெரியோர்களுக்குள்ள பயம், சிவபிரான் திருவாக்கைத் தழுவியதாலும் தமது பிதாவைக்கண்டு உபசரித்ததாலும தேவ பிதுர்வாக்கியங்களை மீறுதல்கூடாதென்பதும், பரதனைக் கண்ணுற்ற கதையால் சகோதரவாஞ்சையின் பெருமையும், பட்டாபிஷேகத்தால் சத்தியமுள்ளவன் சகல ஆபத்தும் நீங்கி நித்தியசுகம் பெறுவானென்பதும முறையே வெளியிடப்பட்டிருக்கின்றது. உத்தரகாண்டத்திலே விஷயங்கள் பல வுளதாதலால அவைகளைச் சமயம் நேருங்கா லெடுத்துக்காட்டுவோம். இவ்வேழுகாண்டங்களுள் சுந்தரகாண்டமென்பது மிகச் சிறந்தது. எங்ஙனமெனில், பெரும்பாலும் அக்காண்டத்தி லடங்கிய சுலோகங்களெல்லாம் அலங்காரம் நிறைந்து அகிலரசம் பொருந்தியன. வேறும் இங்கு ஓர் விசேஷமுண்டு. உலகத்தில் நேரில் கடவுளைத் தாம் வழிபடுவதிலும அவர் தொண்டரை வழிபடுவது மிக நலமெனக்கொண்டு, ஸ்ரீராமச்சந்திரனது சரித்திரத்தைப் படித்து அவரை வழிபடுவதிலும் அவரது தொண்டராகிய அனுமனை அவரது சரித்திரவாயிலாக வழிபடுவது மிக நலமெனக்கருதிப் பலர் இதை அன்போடு படித்துவருகிறார்கள். இப்புத்தகத்தில் மற்றமோர் விசேஷமுண்டு. அஃதியாதெனில், இச்சிறந்த கிரந்தத்தைச் சிலர் காவியங்களுக்கு ஆதியானதென்றும், சிலர் நாடகவிலக்கணம் பொருந்திய பெரிய விலக்கியமெனவும், இதிகாசங்களிற் புகழ்ப் பதம்பெற்றது இதுவேயென்றும், பற்பல புராணங்களில் இதுவே கொண்டாடப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். இதை ரசிகர்கள் காவியமெனவும், கவன சம்பிரதாயத்திற்குக் கற்பலதை போன்றதென்றும், சாஸ்திரிகள் சாஸ்திரமெனவும், வைதிகர்கள் வேதம்போன்றதெனவும், சாமானிய ஜனங்கள் வெகு அழகிய அமைப்புடன்கூடிய கதையெனவும், பிரமநிஷ்டர்கள் உபநிடதங்களிற்சிறந்ததென்றுங் குற்றமற்ற வித்தையெனவும், சிவஞானிகள் பரமசிவப்பிரான் பெருமையை விளக்கும் பெரிய கருவியெனவும், ஸ்ரீவைஷ்ணவர்கள் பரந்

[illegible]

[illegible]

நியாசவித்தையெனவும், சாக்தர்கள் பராசக்தியின் திருவவதாரத்தைக்குறிக்கும் ஓர் புத்தகமெனவும், பௌத்தர்கள் போதிசக்தனென்னும் யகாசக்தனெனனும் [இவ்விருசொற்கள் பௌத்தர்களால் அம்மதத்தில் யோகிகளைச் சொல்லுங்கால் பின்சேர்க்கும் மரியாதை வார்த்தைகள்] ஓர்யோகியின்து கதை என்றும், மிலேச்சர்கள் அங்கங்கள் நிறைந்து பல புத்திமான்கள் புகழத்தக்க இந்துக்களின் ஓர் காவியமெனவும், யோகிகள் யோகசாஸ்திரமெனவும், நீதிமான்கள் நீதி சாஸ்திரமெனவும், சங்கீதர்கள் பண்ணுக்கிசைந்த தென்றும், மாந்திரிகர்கள் மந்திரங்களில் முதன்மை பெற்ற காயத்திரியின் பொருளை விளக்குங்கருவி என்றும், கதையால் ஜீவனம்பண்ணுபவர்கள் தமக்கு இன்றியமையாக் குலதனமென்றும வழங்கிவருகின்றார்கள். ஆதலால், இது எவர் எவ்விதம் கருதினும் அவருக்கு அவ்விதம் நின்று ஆனந்தமளிக்கும் அற்புதக்கற்பகமென்றறிக.

இனிப் பாரதம் முதலிய கிரந்தங்களைப்போல அதிக விரிவை யுடையதுமல்ல. புராணங்களைப்போல் பலருங்கேட்க இனிமையான கதைகளற்றதுமல்ல. ஆகையாலிப்புத்தகத்தை ஆதரியாதார் ஒருவரும் இலர். இக்காலத்திலும் அப்புத்தகத்தின் கிரந்தசங்கியைக் குறைவின்றி முழுமையுஞ் சுலபமாகக்கிடைக்கும். தேசவேற்றுமையால் சிலவிடம் சுலோகங்களின் வேற்றுமைகளும் இதிற்காண்பது அரிது. ஆராயுமிடத்துப் பெரும்பாலும் அவ்வித வேற்றுமைகளை எங்கும் கண்டிலேம். இப்புத்தகத்தில் உத்தரகாண்டமட்டில் வால்மீகிஎழுதியதன்றென்று. சிலரபிப்பிராயப்படுகிறார்கள். அவருரைக்கும் யுக்திகளையும், கிரந்தசங்கியையையும், முடிந்த சித்தாந்தத்தையும் பின்னர்க் கூறுவாம்- முடிவில் இவ்விந்துதேசத்திற் பிறந்த அநேக கவிகளுள் கவிகுலகுடாமணியான இவ்வால்மீகமகாரிஷியளவு பெருமைபெற்றவர் ஒருவருமில்லையென்பது எமது துணிபு. "ரிஷியல்லாதவன் காவியம் செய்யான்" என்னுமிடத்திலுள்ள ரிஷி பதமும் இவ் வால்மீகமகரிஷியையே யுணர்த்துமென்பது காண்க.

வரும்.

நம்மவருக்கு ஆவசியகம் வேண்டியது யாது?

[முன் தொடர்பு.]

மூவித ஒற்றுமைகளும் உபந்நியாசத்தால் இன்றியமையாதென்று முன்னெடுத்துக்காட்டினோமல்லவா? அதற்கு இன்னும் பல காரணங்களுண்டு. அவையாவன: இத்தேசத்தில் குருவெனப் புகழ்பெற்றவர்கள் ஸ்ரீசங்கராசாரியர் முதலாயினோரென்பது நீவிரறிந்ததேயாம். அவர்களை வழிபடுவதே பரமதர்மமெனவும், அஃதே முத்தியளிக்குமெனவும், இக்காலத்தவர்சிலரும் நம்புகிறார்கள். இதனைச்சற்றுக் கவனிக்குங்கால் இதற்குக்காரணமாயிருப்பது அக்குருவின் நாவலிமையே. அவர்கள் தமது திருவாக்காகிய ஆயுதத்தாலல்லவோ துர்மதப்பைசாசுபிடித்த மற்றவர் கோட்பாடுகளை வேர் களைந்தார்கள். அதுகொண்டே அவரிலும் முன்னோர் அனேகர் அவ்வம்மதங்களுக்கு ஆசிரியர்களாயிருந்தும், கேட்பவர் உள்ளங்குளிர உபந்நியசித்து அவ்வக் கோட்பாடுகளுக் கேற்பப் புத்தகங்களை எழுதிவைத்தனராதலாலும், அக்காலத்து நாத்திகர்முதலிய ஏனையமதஸ்தர்களைவென்றாராதலாலும் அவருக்கு ஓர் பெரும்புகழ் விளைந்தது. மதாசாரியார் என்னும் பெயரும் வெளிவந்தது. முற்காலத்தில்

[illegible]

இத்தேசத்தில் டௌத்தமதம் விர்த்தியானதும் எத்தேசத்திலும் உடங்கியாச வலிமையார்ஜனென்பதற்கு ஐயமில்லை. ஏனெனில், சுத்தோதனனென்னும் ஓர் மகாராஜனின் அருமபுதல்வனுன சாக்கியமுனி என்பவன் தான் அரசனுயினும் அப்பெருமை பாராட்டாது வெளிவந்து பலவிடங்களிலுந் தமது கொள்கையை உபந்நியசித்து வெளிவந்தானுதலால், அவர் மதத்தைப்பலர் கைக்கொண்டார்கள். அவ்வித விர்த்தியடைந்த அம்மதத்தை இத்தேசத்தினின்று அகற்றுவது "உஷ்ணத்தை உஷ்ணத்தால் மாற்று" என்றபடி அதேவழியால் மாற்றவேண்டுமென்று எண்ணிப ஸ்ரீசங்கரமுனி முதலாயினோர்களும் அவ்வழியே கொண்டனர்கள். ஆதலால், நம்மவர்க்கு எல்லாவிஷயத்திலும் சபைகளும் சபாநாயகர்களும் வேண்டுவது ஆவசியகம் என்பது ஸ்மிருதிகளின் இரகசியங்களைக் கற்றுணர்ந்த பண்டிதர்கள் அறிந்த விஷயமே. இந்துக்கள் செய்யும் ஒவ்வொரு கருமத்தின் தொடக்கத்திலும் சதசுககு நமஸ்காரஞ்செய்வதும், புகழ்பெற்ற ஒருவனைச் சபைக்கு நாயகனுக வரித்தலும், பொருள் கொடுக்கத்தக்க யந்திரம் மாத்திரையில் தற்காலத்திலுள்ளவர்கள் சொல்லிவருகிறார்கள். சபைகளும் சபைத் தலைவர்களும் கூடுவது அலங்காரத்திற் கல்லவே. தம்முள்ளத்திற்றோன்றுமபிப்பிராயங்களை வெளியிட்டு அதனைப் பலருமறிந்து அனுஷ்டிக்கச்செய்தலல்லவோ அதன் கருத்து. இக்காலத்திலுள்ள நம் ஹிந்துதேசத்தவர்கள் இவ்விஷயத்தில் சற்றுங் கவனியாது ஒவ்வொரு கருமங்களிலும் சபையென்னும் பொருள்படத்தக்க(வரிஷசு) என்னும் பதத்தை மரியாதைக்குமட்டில் சொல்லுகிறார்கள். இதுவும், சில ஜனங்கள் பெரியோர்கள் எழுதிய நூல்களின் பயனறியாது, அப்புத்தகத்திலுள்ள எழுத்துக்கள் இத்தன்மையதெனத் தாமும் பாராது பிறர்க்குங் கொடுக்காது, அவற்றைப் பூஜையில்வைத்துப் பூணூற் கயிற்றினுற் கட்டிப் புட்ப தூபதீபங்களால் பூஜித்துவருதல் போன்றதே. இத்தேசத்தில் இவ் வுபந்நியாசமென்னும் வழக்கம் தொன்றுதொட்டுள்ளதென்பதற்குத் தகுந்த பிரமாணமாய் ஸ்ரீராமாயணம், அவ்வம்மதாசாரியர் சரித்திரம் முதலியவற்றை எடுத்துக்காட்டினுமல்லவா. அவ்விதமே இத்தேசத்திலுள்ள வாலயங்கடோறும் சபாமண்டபமென்று ஓர் மண்டபம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இக்காலத்தில் அம்மண்டபம் ஏற்பட்ட நோக்கத்திற்கு விரோதமாய்ப் பல ஆலயங்களில் அவ்விடத்தைச் சிற்றுண்டிகள் விற்குமிடமாக வாடகைத்திற்குக் கொடுக்கப்படுகின்றது. அந்தோ! இந்துக்களின் குலத்திற் பிறந்தும், மேன்மைதங்கிய புராணங்களிற் புகழப் பதம்பெற்று முக்கிய சித்திரஸ்தானமாய அநேக சிவாலய விஷ்ணுவாலயங்களுக்குத் தருமபரிபாலனத் தொழிலைக் கைக்கொண்டிருக்கும் சிலர், ஆலயத்திற்கு ஏதோ பணம் சேர்க்கவேண்டுமென்று கருதி அவ்விடத்தை ஏற்பட்ட நோக்கத்திற்கு மாறுக வேறு காரியத்திற்கு உபயோகித்துவருகின்றார்களே! கற்றுணர்ந்த சுதேச பண்டிதர்களே! ஆகமங்களில் சபாமண்டபங்கள் சிற்றுண்டிக்கடைகளுக்காக ஏற்பட்டதோ? வித்தியாபிரதிஷ்டையன்றோ அவ்விடத்திற் செய்யற்பால [illegible]. இக்காலத்தில் எந்த இந்துதேவாலயத்திலேனும் [illegible] வேறிவருகின்றதா? அந்தோ! இஃதென்ன [illegible] காரணம் இத் தருமபரிபாலனஞ் [illegible] லாக் குறைவேயொழிய வே[illegible] ாகப்படினுமோ, பின்

[illegible]

[illegible]

சொல்வோம்! உலயோகமற்ற அசுசிக் களஞ்சியங்களான வேசிகர்களின் கூத்துகளுக்கும், மற்ற ஏதேதோ விஷயங்களுக்குமே விநியோகிக்கப்பட்டு வருகின்றன. நாம் அறிந்தமட்டில் நம் முன்னோர்கள் லௌகிககாரியங்களிலும், வைதிககாரியங்களிலும் சபைகளை முற்கொண்டு தம்முள்ளத்திற்றோன்றிய தாற்பரியங்களைப் பிரசங்கவாயிலாக நிறைவேற்றினார்கள். ஆதலால், இந்து சகோதரர்களே! நம்முன்னோர்க்குக் குலதனம் நூலறிவென்றறியுங்கள்; உங்கள் நுண்ணறிவின் வலிமையை வெளியிடுங்கள்; ஆங்காங்கு சபைகளைச் சேருங்கள்; விடாமுயற்சியைக் கைக்கொள்ளுங்கள்; ஐயமச்சமின்றி உமதபிப்பிராயங்களை வெளியிடுங்கள்; உன்மதச்சண்டைகளை ஒழியுங்கள்; மேற்றிசைப்பாதிரிமார் விதண்டாவாதங்களை அகற்றுங்கள்; உங்களாலியன்றமட்டும் ஆங்காங்கு சபைகளை நிலைநாட்டுங்கள்; ஆலயங்கடோறுமுள்ள சபாமண்டபங்களை வீணாக்காதீர்கள்; எம்போலிகள் வார்த்தைகளுக்குஞ் செவிசாயுங்கள்; வீணிற்காலத்தைப் போக்காதீர்கள்; நமது முயற்சிக்குக் காலம் நேர்ந்ததாக எண்ணுங்கள்; உங்கள் முயற்சி கைகூடப் பரமகிருபாநிதியான பரமன் அருள்புரிவாராக.

ஸ்ரீலோகானந்த பத்திரிகை.

இப்பெயர் வாய்ந்த ஓர் நங்கை பிறந்த மூன்றுமாதங்களுள் தமது திருமேனியை நோக்கும் ஒவ்வொரு ரசிகர்களையுமானந்திக்கச் செய்தும் அவரதுள்ளங் கவர்ந்து பேரானந்தவெள்ளம் பெருக்கித் தம்மை மறக்கச்செய்யத் தைரியங்கொண்டனளென்பது மிக வியக்கத்தக்கதே. இம்மாது பிறந்தவுடனே பெருந்தன்மை பெற்று உலகெலாங் களிக்க வுபாய மிதுவென "லோகானந்தத்தை" ஆராய்ந்து தேர்ந்தாள். கல்விக்கடலைக் கடைக்கக் கருதி அதனுண்மையை ஒருவாறு விசாரித்தாள். நீதிகளையும் அறிந்து மற்றவர்க்குப்புகட்ட அதன் விசாரணையையும் கைக்கொண்டாள். நமது தேசத்தார் பெருநிதியாய்க் கொண்டாடிய வடமொழியின் பெருமைகளை வெளியிட்டு மற்றைய புன்மொழிகளை நோக்கி மயங்கிவரும் நம்மவர்களுக்குப் பரம உபதேசம் செய்துவருகின்றாள். இவளது நடைகளையும் இனிய மொழிகளையும் காணும் எப்புலவனேனும் இவளைத் தமதுகைக்கொள்ளாதுவிடுவனோ. இந்நங்கைக்கு ஏற்ற தோழியான மற்றொரு மாது தம்பினத்தாரிடமும் இந்நங்கையையழைத்து அவர் கையிலும் சேர்ப்பிப்பாளென்று நம்புகிறோம். இவளது திருமேனி இரண்டுதேவபாஷைகளாலமைந்தது. வலதுபக்கத்தில் தேவரென்பவர் அமரர்; மற்றைய பக்கத்தில் தேவரென்பவர் அரசர் எனப் பொருள்கொள்க. தமது பெயரையே தக்க முடியாய்க்கொண்டும், உலகத்தோரைக் களிக்கச்செய்வது உத்தம அமிர்தமெனக்கொண்டும், பற்பல நூல்களை ஆராய்ந்தும் உண்மைநிரம்பிய உத்தமபாஷையாகிய எமது வடமொழியின் பெருமையை ஓங்க வளர்க்க உத்தேசங்கொண்டு, ஒற்றுமையின்மை யென்னுமோர் துராசாரத்தை யொழித்து முன்வந்துநின்ற பண்டிதர்களாலமைந்த லோகானந்த சமாஜத்தாரால் பரிபாலிக்கப்படுகின்றனள். இவ்விஷயத்தில் மற்றவர்களிலும் எமக்கு ஓர் பெரிய ஆனந்தமுண்டு. அஃதியாதெனில், நமது தேசமதாபிமானிகளான சகோதரர்கள் மனமகிழ வெளிவந்து மதுரமான நடையைக்கொண்டு கேரளதே

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சத்திற் பிறந்த "விஞ்ஞானசிந்தாமணி" யென்னு நங்கைமட்டில் தமக்குத் தோழியாயமைய, சமயம் வாய்த்தபொழுது அவளுடன்மட்டில் சில மொழிகளை மொழிந்து அம்மட்டில் களிகூர்ந்து, எமக்குக் கண்டவிடமெல்லாம் கலந்து விளையாடத்தோழிகளில்லையேயென்று கவலையுற்றிருந்த இப் "ப்ரம்மவித்தை" நவீன தோழியாகிய இவளைக்கண்டு பரமானந்தங்கொண்டனளென்பதே. இனி, சகலலோகநாதனுன கடவுளினது நித்தியமான இச்சை, ஞானம், கிரியை என்னு முச்சத்திகளையும்போல் ஓரே மண்டலத்திற்றேன்றி நீடூழிவாழ நின்மலனருளைப் பிரார்த்திக்கின்றேம். இவ்விரண்டு பத்திரிகைகளும் மேற்கண்ட பத்திரிகையைத் தோழியாய்க்கொண்டுநிற்பதிற் றடையில்லையென்பதே எமது துணிபு. ஆயினும், நம் தேசத்துப் பண்டிதர் முதலாயினேரிற் பலர் முன்னேர் தாற்பரியத்திற் கிணங்காது, தமது பரமசகியாகிய ஆங்கிலேயபாஷையில் அன்புற்று அங்குள்ள நோக்கத்தால் முன் பிறந்தோளை மறந்துசெல்லாமல், மூவரு மொற்றுமையடைய முக்குணங்கடந்த மூலப்பொருளருளைப் பிரார்த்திக்கின்றேம்.

இராமாயணநீதிரத்தினவளியும், ஆரியப்பிரஸ்னேத்தரரத்தினவளியும்.

இவ்விரு மகுடஞ்சூட்டிய இரண்டு புத்தகங்கள் எமக்குக் கிடைக்க அவைகளைக் கண்டு களித்தோம். ஆரியவம்சஸ்தரது நீதி, ஜாதி, ஆசாரம் முதலியவற்றின் மேன்மை எடுத்துக்காட்ட விருதுபூண்ட சிவசங்கரபண்டியா B. A. அவர்களால் வெளியிடப்பட்டன. இவற்றுள், ஆரியப்பிரஸ்னேத்தரரத்தினவளி என்பது ஸ்ரீமத் ஜகத்குரு சங்கராசாரியசுவாமிகளது திருவாக்காகிய பிரஸ்னேத்தரரத்னமாலையென்னும் புத்தகத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டுளது. இராமாயணநீதிரத்தினவளியென்பதோ, வால்மீகமாமுனிவரருளிச்செய்த ஸ்ரீராமாயணமென்னுங் கிரந்தத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது. அதன் முகவுரையாய் இங்கிலீஷ்பாஷையில் ஒரு உபந்யாசமெழுதி அதன்கண் அவ்விராமாயணத்தின் மகிமையை நன்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், ஸ்ரீராமாயணத்திலுள்ள இரகசியார்த்தங்களநேகமும் உபந்யாசத்திற்றனே காணலாம். அதில் சிலபாகம் கற்புடைய பெண்களுக்கும், சிலது உத்தமபுருஷர்களுக்கும் அத்தியாவசியகமான "சாத்வீகசூடாமணி,, என்றும், "சாதுசூடாமணி,, என்றும் இரண்டுபாகங்களிருக்கின்றன. அதனுடன், கல்விபயிலு மாணுக்கரின் சௌகரியத்திற்காகத் தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ பாஷைகளில் தெளிவான உரையு மிருக்கின்றது. இதனைப் படிக்கும் பிள்ளைகளுக்குப் பாஷையின் நற்பயிற்சி யுண்டாவதுமன்றி, நமது ஆரியவர்ணத்தவர் மதஜாதியாசாரங்களி லுண்மையான நம்பிக்கை பிறக்குமென்பதிற் றடையில்லை. ஆதலால், இப் புத்தகத்தைப் பலருங் கொண்டாடுவார்கள். அதில் ஒன்று எமது பார்வைக்கு அனுப்பிய மேற்கண்ட பண்டியா அவர்களுடைய முயற்சிகைகூடக் கடவுளை வேண்டி அவருக்கு மிவருக்கும் அனந்த வந்தன மளிக்கின்றேம்.

"சிவனுந் தேவனு";

என்னுந்

தியநாவுக்கு ஆப்பு.

இத்தலைப்பெயர்வாய்ந்த சிறந்த புத்தகம் ஒன்று "கிறிஸ்துமதகானன் குடாரி" என்பவரால் வெளியிடப்பட்டிருக்கின்றது. இதில், மிக்கமேன்மையுடையதாகிய நம் இந்துமதத்தையும், அதன் உண்மையை யாவரும் எளிதில் உணர்ந்து அ

[illegible]

வ்வழியொழுகி உய்யும்பொருட்டு, அவ்வவர் பக்குவாபக்குவப்படி எவ்வெவ்வதிகாரிகட்கு எவ்வெப்படியுணர்த்தவேண்டுமோ அவ்வவ்வதிகாரிகட் கவ்வவர் நுண்ணறிவிற்கேற்ப வேத புராண இதிகாசங்கள் வாயிலாகப் பலவழியாலும் போதித்து மெய்ஞ்ஞானவீடுபேற்றை யுறுவிக்கும் நம் இந்துசாஸ்திரங்களின் உள்ளுறைகளையும் இத்தகையதென்று எட்டுணையும் அறியுமறிவு சிறிதுட அமையப்பெறாத நுண்ணறிவற்ற மிலேச்சராகிய கிறிஸ்தவர், தம் அறியாமையினாலும், துரபிமானத்தினாலும் நியாயாபாஸங்களாகிய தராசுகளுக்குச் சிறிதும் நிறைகோடாது பற்பல அங்கங்களாலமையப்பெற்ற இந்துசாஸ்திரங்களாகிய வச்சிரமலைகளைத் தம் அற்பப் போலியறிவிற்கு எட்டிய சில வீண்தூஷணைகளாகிய ஆயுதங்களினாற் பிளக்க ஆசைகொண்டு அதின் முட்டிகொண்டு வாளா பிதற்றித்திரிவதுமன்றி, "சிவனுந் தேவனா" என்று சில வீணதூஷணைகளடங்கிய பத்திரம் ஒன்றை அச்சிட்டுப் பரப்பித் தெளிந்த அறிவிலார் நெஞ்சத்தைக் கலக்க முயன்றதனால், அவர் உண்மைதேராது அறியாமையினாற் காட்டியுள்ள போலிநியாயங்களும் வீண்தூஷணைகளும் சிறிதும் பயனற்றதென்பதை யாவரும் எளிதில் உணரும்படி, அதன் உட்கருத்து இன்னதாமென்பதை நன்கு விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட செம்பொருள், குறிப்புப்பொருள்களால் மெய்ஞ்ஞானத்தையுணர்த்தும் இந்துமதவுண்மை யறியாது வீணே பல பதர்மொழிகளைப் பேசித்திரியும் மதியிலிகளும், அன்னோர் வார்த்தைகளைக்கேட்டு மயங்கும் ஏனையோரும் அவ்வுண்மைகளைக் கண்டு தெளிவாராக. இதுகாறும் நம வித்துவான்கள் இப்படிப்பட்ட உண்மைகளைப் பலர்க்கும் எடுத்துக்காட்டாமையினாலேயே நம்மவர் அவர் துர்ப்போதனைகட்கு மயங்க நேரிட்டமையினால், இனியேனும் நம் வித்துவான்கள் இதுவிஷயத்தில் தக்க பிரயாசை யெடுத்துக்கொண்டு நம்மவரைக் காத்துவரல் அத்தியாவசியகமாம். கிறிஸ்துமத கானனகுடாரியார் செய்த இப்பேருதவி நம்மவர் யாவராலும் என்றும் இனிது பாராட்டத்தக்கதே. இப்புத்தகங்களிற் சில எமது பார்வைக்கு அனுப்பியதற்காக நாம் அவர்கு அநேக வந்தனஞ் செய்கின்றோம். இப்புத்தகம் பிரதியொன்றுக்கு விலை அ௩ அரை. இதுநிற்க.

நம் இந்துமத சகோதரர்களான சைவ வைணவர்களே!

எம்மைப் பலதிறத்தினும் வஞ்சித்துக் கெடுத்தலே தமக்குரிய விரதமாகக்கொண்டு பல மோச உபாயங்களைத் தேடிவரும் கிறிஸ்தவர்கள், மற்றதையெல்லாம் விடுத்து இப்பொழுது சிவனுந் தேவனா என்று சில புன்மொழிகள் கூறத்துணிந்தமையை உற்றுநோக்கில், சைவவைணவர் தம்முள்ளே முரணுற்றிருக்கும் இத்தருணத்தில் நாம சிவனை நிந்தித்து ஒன்றை யெழுதிவிடுவோமாயின், அதுகண்ட சைவர்கள், இதனை வைணவர்தாமெழுதியிருக்கவேண்டுமென்று தாம் விஷ்ணுவை நிந்திக்கப்புக, இப்படியே இவர்கள் தம்முள்ளே ஒருவர்க்கொருவர் கலாம்விளைத்து இருக்கும் ஒற்றுமையையும் இழந்துவிடுவார்களானால, தம் காரியத்தை இலகுவில் முடித்துக்கொள்ளலாமென்ற துரபிப்பிராயங்கொண்டே இப்படிச் செய்தனரொன்று யோசிக்கவேண்டியதாயிருக்கின்றது. ஆதலால், இந்துமதமெனும் ஓர்மதசகோதரர்களாகிய நாம் புறமதப்பைசாசங்களாகிய அவர்களை நியாயப்படைகொண்டு துரத்தி எம்மவரை அவர்

[illegible]

பத்ரிகா:

[illegible]

மாயவலையிற்சிக்காவண்ணம் பாதுகாத்தல் நம்மவர் யாவர்க்கும் ஒத்த கடனாதலின், இச்சமயத்தில் உண்மதவிரோதங்களைப் பாராட்டி ஒருவரோடொருவர் மற்புரிந்து புறமதத்தினர்க் கிடங்கொடுக்காது ஒற்றுமையாயிருந்து அவர் மோசங்களை நாசமாக்குதல் அத்தியாவசியகமென்றதைப் பல்காலும் சிந்தித்துத் துணிந்து அங்ஙனமே செய்துவரல்வேண்டும். சைவவைணவச்சண்டைகளைத் தலைக்கொள்ளுதல் பெரும்பாலும் கேட்டையே விளைவிக்கும்.

கடிதங்கள்.

கடிதர்கள் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

☞ கடிதமெழுதுவோர்க்கு ஓர் விஞ்ஞாபனம்.

ஐயா,—கடிதநேயர்களே! யாம் வணக்கமாய் செய்துகொள்ளும் ஓர் விண்ணப்பத்திற்குச் செவிசாயுங்கள். வித்துவான்களுக்குக் குற்றங்களைக் காணடலியல்பாதலால் அவ்விதம் எமது வார்த்தைகளில் குற்றங்களை ஆராய முயலவேண்டுவதில்லை. நீங்கள், இத்தேசத்தில் நம்மவர் வைதிக காரியங்களில் பெரும்பாலும் சிரத்தையை யொழித்தார்களென்றும், ஸ்மார்த்தகாரியங்களில் அதிகமாய்க் காட்டப்படுவதில்லை என்றும், புராணங்களை முற்றிலும் பொய்யெனச்சாற்றுகின்றார்களென்றும், ஆகமங்களை ஆதரிக்காமல் அலைகின்றார்களென்றும் அறிந்திருப்பீர்களே இதற்கு முகற் காரணம் நம்தேசத்தில் தற்காலத்திற் பிறந்த குழந்தைகள் முற்றிலும் நம்மதத்தை யறியாது மற்றவர் பாஷையையே சற்றுணர்ந்து, ஆரியர்களுக்கும் குலதனமான ஆரியபாஷையைத் தொலைத்து அரிய பிரமசாரியாசிரமத்தை ஆங்கிலேய பாஷையைக் கற்பதால் நிறைவேற்றி நமது மதத்திற்கு நேர் விரோதிகளாற் கற்பிக்கப்பட்டு, நமது பண்டிதர்களையே விரோதிக்குந் தன்மை யுள்ளவர்களாய் நிமிஷந்தோறும் நடையுடைகளை மாற்றித்திரிகின்றார்கள் என்பதல்லவோ. இவ்விதமிருக்க, நமது மதசாதி ஆசாரங்களுக்கு நேரிட்ட இப்பெருஞ்சங்கடத்தைச் சற்றும் கவனியாது வீடுகளிற் படுத்துறங்குவதும், சமயம் நேர்ந்தால் தமது சாமர்த்தியத்தை அயல் பண்டிதர்களுக்குக்காட்டி இங்கே மகிழ்ந்திருப்பதும் இவர்களுக்கு அழகோ. இவர்கள் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து பிறமதப் பைசாசங்களை ஓட்டுவதல்லவோ இவர்களுக்கு விருது. இப்பொழுதோ நாஸ்திகக்கொள்கை நம்மவரை நாடி வருகின்றது. சில சமயம் ஈசுவரபக்தி எவனுக்கேனு முண்டானால் அவனும் நாத்திகத்தில் ஓர் வகையான கிறிஸ்துமதத்தில் விழுந்து வீணுகின்றான். அவ்விதம் மதப்பிரஷ்டராவோரைத் தடுப்பவரும், அவ்விதம் அவர் சென்றதால் மனவருத்தமடைவோருமாய் ஓர் பண்டிதருமில்லையே. இச்சமயத்தில் நாம் ஒருவர்க்கொருவர் உண்மதச்சண்டைசெய்து தெருவில் நிற்போமாயின், இருவரும் ஒருவர் மற்றவர்மேற் சொல்லுங் குற்றங்களைக் கண்டு இருவரையுந் தூஷிக்க எதிரிகள் முயல்கின்றார்கள். ஆகையால், இச்சமயத்தில் கருணைகூர்ந்து நாம் சொல்லும் மொழிகளைக் குறைவாகவெண்ணாது, நாஸ்திக கிறிஸ்த மதங்களை ஒழிக்க முன்வாருங்கள். எழுதும் விஷயங்களைத் தெளிவாய் பல ஏதுக்களால் பல ஜன்மமுண்டென்றும், ஓர் பரமாத்மா உண்டென்றும்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அறிந்தமட்டில் கிறிஸ்துமதமுதலிய போலிமதங்களின் குற்ற ங்களையும் எடுத்து வெளியிடவேண்டுவதே ஆவசியகம். சைவனுயினும் வைணவனுயினும் எவ்விதத்தினும் அவன் வைதிகனே. ஆதலால், அதுவிஷயத்தில் முயலவேண்டிய ஆவசியக மில்லை. அவ்விவாததத்திற்கு ஓர் முடிவுமில்லை. ஓர் கிளைவிட்டு மறுகிளை தாவிக்கொண்டே யிருக்கும். ஆதிலால், இம்முறை ஸ்ரீசுந்தரராஜசாஸ்திரிகள், ஈரோடுச் சித்தாந்தியார், ஸ்ரீமது வஞ்சிநாட்டின் சபிகரான வைணவர், ஸ்ரீவெங்கடரமணதாசர், ஸ்ரீமது சந்திரசேகர்சாஸ்திரியார் முதலிய கடிதநேயர்கள் வரைந்த கடிதங்களெல்லாம் நிறுத்திவைக்கப்பட்டன. சமயமநேருங்கால் ஒவ்வொன்ருய் வெளிவரும். ஆதலால், மேற்கண்ட வித்துவான்கள் நமது விண்ணப்பங்களுக்குச் செவிசாய்த்துக் கிறிஸ்த நாஸ்திகமதங்களை ஆங்காங்கு கண்டிக்கப்புகுவார்களென்றும், நமது உண்மதச்சண்டைகளை ஓர்பக்கத்தில் வைப்பார்களென்றும், எமது விண்ணப்பத்திற்கு நண்பர்கள் செவி கொடாம லிருக்கமாட்டார்களென்றும் நம்புகின்றோம்.

பி. வி. ப.

"ப்ரம்மவித்தியா" பத்திராதிபரவர்கட்கு வந்தனம்.

ஐய, எமது நண்பரான பத்திராதிபரே! இந்தியாவென்னும் பெயர்கொண்டு இமயமலைதொடங்கி ராமசேதுகாறுமுள்ள இப் பரதகண்டத்தின்கண் வசியாநின்ற ஆரியர்களின் கூட்டத்திற் சிலகாலமாகப் புகுந்த கிறிஸ்தவனொன்னும் ஓர் வகுப்பினர், இந்துமதத்தினரான அநேகரைத் தம்மதத்திற் சேரச்செய்துவருகிருர்களென்பது பலரு மறிந்த விஷயமே. நம்மவருட் சிலர் நம்மதத்தின் பிரயோசனத்தையும், உண்மையையும், பெருமையையும் சிறிதும் அறியாது வேப்பங்கனிபோன்ற மற்றவர் வார்த்தைகளை இனியதென்று நம்பி, சிவன், விஷ்ணு முதலிய பிரபல தெய்வங்களை வணங்காது, வீணில் நரகக்குழிக்கு ஆளாகின்றுர்கள். இந்துக்களது ஜாதி, மதம், ஆசாரம் முதலியவற்றிற் றேர்ந்தவரான பூசுரரும் "யவனரென்னு மோர் ஜாதியாரிடம் அடிமைபாய் வயிற்றிற்செனத் தமது சரீரத்தையும் விற்கிருர்கள்" என்று விசுவகுணுதரிசனமென்னும் புத்தகத்திற் சொல்லியபிரகாரம் வயிற்றுப்பிழைப்பைத் தேடுகிறவராளுர்கள். இங்ஙனமிருக்க, இப் புன்மதங்களைத் தொலைத்துச் சன்மதங்களை நிலைநாட்டப் பல வித்துவான்களாதரிக்கத்தக்க நமது "ப்ரம்மவித்தியா,, பத்திரிகை வெளிவந்தது இந்துக்களின் பாக்கியமென்றே எண்ணுகிறோம்.

[மொழிபெயர்ப்பு.] உதயவர்மராஜா.

ஐயா, பத்திராதிபரே! தமது பத்திரிகையிற் சில பெரியோர்களின் சரித்திரங்கள் எழுதியிருப்பதைக்கண்டு அகமகிழ்ந்தோம். ஆலாசியநாதசாஸ்திரிகள் முதலிய பத்திரிகாநேயர்கள் பலரிருந்தும் இத்தேசத்து மகா பண்டிதனுன ஸ்ரீஹரிஷகவியினது சரித்திர வரலாறு இதுகாறும் வெளிவரவில்லை. ஆதலால், தமது பத்திரிகாநேயர்களை யாம் கேட்டுக்கொள்வது யாதெனில், இத்தேசத்துக் கவிமணியாகிய ஸ்ரீஹரிஷகவியின் சரித்திரத்தைக் கூடிய சீக்கிரத்தில் எடுத்து வெளியிடுவார்களென்பதே. உதயவர்மராஜா.

(மொழிபெயர்ப்பு)

Printed and Published for the Proprietor,
at the Brahmavidya Press, Chidambaram.

ப்ரம்மவித்தியா
அனுபந்தம்.

ப்ரம்மவித்தியா விர்த்தி.

சென்ற டிசம்பர்மீ ௩௧௳ சனிவாரம் வெளியான ப்ரம்மவித்தியா பத்திரிகை கட்டோடே முடியும் அந்தத்தின் மூலையில் ஒதுங்கிப்பதுங்கி நின்ற விசேஷ அறிக்கையை நாம் கண்டு ஆனந்தங்கொண்டு கைகளிரண்டையும் நேர் உயரத்தூக்கி மனகிளர்ச்சி அடைந்தோம். இந்தப்பத்திரிகைக்குக் குறித்த கிரயவிகிதம் பத்திரிகையின் முதற்பக்கத்தில் கண்ணெதிரே காணகின்றது. அது வருஷம் அத்தனைக்கும் இரண்டு ரூபாய்க்கும்காலரூபாய் குறையும். இத்தனை கிரயம் குறைந்த பத்திரிகையை எங்கும் கண்டதில்லை. இவ்விகிதத்தை ஒப்புக்கொண்டு, கையொப்பக்காரர் நாளாவர்த்தியில் குறித்த அளவுக்கு சேரச்சம்பவித்தால் கைவரும் பணம் செலவிடும் தொகைக்குக் கட்டிவருமென எண்ணி பத்திரிகையை விருத்திசெய்வதென்று இதைத்தொட்டுககட்டாயம் கூறி கங்கணம் கட்டிய சீமான்கள், அவ்வாறு கையொப்பத்தொகை ஏறுமுன் அனுபந்தம் ஒன்று பத்திரிகையுடன் கூட்டிக்கட்டினார்கள்; ஆனால், முன் அட்டையிலிட்ட அச்செழுத்தை அனுபந்தத்தில் பதியவிட்டார்களென எவரும் இப்பொழுது வாது கூறவும் கூடும். அட்டையிலிட்ட அச்செழுத்திலும அனுபந்தத்தில் ஒடுங்கி நிற்கும் எழுத்து அதிகம். அன்றியும் பத்திரிகையின் உடலில் பதிந்த எழுத்துகள் முன்னிலும் சிறுத்து, சங்கதி பெருகியது. பெருகியும் கட்டணம் ஏறாது நின்றது நமது பாக்கியமே.

எவ்வாறுவது இந்தப் பத்திரிகையை நடத்திவரும் துணிவைச்சிந்தையில் இருத்தி, பெரும்பாலும் சம்ஸ்கிருதமும் வேதசாஸ்திரமும் பயின்றிராத இஷ்டர்கள் நம் பாரதகண்டத்தில் உதித்துலாவி மறைந்து புதைந்துபோன மகாவாக்கியங்களை இதன் மூலமாக அறிந்து அறிவு தெளியவேண்டும் எனும் தேசோபகார தாற்பரியத்தை மேற்கொண்டு இதன் மூலபுருஷர் பக்குவமாய் இப்பத்திரிகையை நடத்திவருவதை நாம் கண்ணுறக்காண்கிறோம். இவ்வாறு நடத்துவது, இதன் மூலம் இறையளவும் பிரயோசனம் அடைதற்பொருட்டல்ல; யாவரும் மதாசார சம்பந்தமாயுள்ள சங்கதிகளை அறிந்துகொள்ள வேண்டுமெனும் பரோபகார அபிப்பிராயத்தின் நிமித்தமே. இத்தனைகாலம் தடையற நடந்தேறி, தமிழ் பத்திரிகை அனைத்திற்கும் திலதம்போல ப்ரும்ம சன்னிதானத்தைச் சுட்டிக்காட்டி நின்ற சுகிர்தம் தேம இப்பத்திரிகை அயனம் ஒருவட்டம் சுழன்றோட ஒண்ணுதென்று எவர் தான் புகல்வார். சிலர் வாக்கு மூலமாகவும் சிலர் கடிதமூலமாகவும் வருந்திப் பரிந்து மிகவின்பத்துடன் பத்திரிகை அயனவட்டத்தில் திருப்பியோட்டக்கேட்டும், ஏனையவரும் ஒப்பிவருவதை அதிபரெதிர்பார்த்து காலங்கழிகக நிமித்தமில்லையே. இரணடொருவர் விருத்தியைத்தொட்டுநின்று பேசியதைக்கேட்ட ஏனையவர் அதுஒக்குமென்றெண்ணி மௌனம்சாதித்தார்கள். எவரும் அதுகூடாதென மொழிந்தாரில்லை. ஆகவே இஷ்டர்கள் அத்தனைபெயரும் இஷ்டங்கொண்டாரெனக்கொள்க. இங்கிலீஷ்பத்திரிகை அச்சிடுவதிலும் தமிழ்முதலிய சுதேசபாஷாபத்திரிகை அச்சிடுவது கஷ்டம். அதிலும்வடபாஷைபத்திரிகை அச்சிடுவதுமிக

இங்கிலீஷ் பத்திராதிபர்கள் இரணடொ
யாதாயினும் ஒரு முக்கிய விஷயத்தைக்குறித்து
எழுதுவார்கள். அவர்கள் உழைப்பு அம்மாத்தி
ச்சங்கதிகளை வேறு இங்கிலீஷ் பத்திரிகை
ளைப்பார்த்து அச்சிடுவார்கள். அச்செழு
றி பத்திராதிபருக்கு இதில் உழைப்பு இ
தியா பத்திரிகையோ, வேதசாஸ்திரங்
களையும் கலைக்கியானங்களையும் வாசித்
த்தையும் வடமொழியில் மொழிபெய
டுகின்றது. ஆகவே, பத்திரிகை மு
ராதிபர் தலைமேற் பொறுத்தபாரம்
றிய அன்று தொடங்கிப் பத்திரி
ள் அநேகர் அறிவு தெளிந்து
ளென நேரம் நாவார உ
பின் பிடிவாதம்கொண்ட
ண்டு நம் வேதசாஸ்திரத்
க்கண்டு, மௌன மென்னும் பி
திரிகையில் இன்னும் என்னென்ன
று நட்டகண் கட்டபடி கண் சிமிட்ட
வருகிறார்கள். இவ்விஷயத்தைபபற்றி வி
மில்லை. யாவரும் அறிந்து வியந்து கொ
தியா பத்திரிகையின் அருமையை வருந்தி
ம். மேற்குறித்த விசேஷ அறிக்கையில் இப்பத்
ருவட்டம் சுழல்வதைத்தொட்டு முன் ஒரு முறை
ரிகையில் அச்சிட்டதாகச் சொல்வதைக்கேட்டு
நம்தலையில் மோதினோம். அந்த அறிக்கை நம்
து நம் துர்பாககியந்தான். பத்திரிகை விருத்தி
கங்கணங்கட்டி வாதாடி நிற்கும் நாம் இதுகா
ல் ஓரிடம் தரித்து நிலைகொள்ளுவோமா?
கை நம்மை எட்டாத காரணம் அறியோம்;
லத்தகும் காரணம் ஒன்றுண்டு; அது இது:— அ
ர்க்கத்தைத் தொட்டு நின்று உறுதி பிடித்துப்பேச ஆரம்ப
தோம். எதையும் பேசுமுன் அடித்தறையை ஆதாரங்கண்டு
திடப்படுத்த வேண்டுமே. அதனிமித்தம் முன் சாஸ்திர சர்த்தர்கள் பேசி அச்சிட்ட வைராக்கியத்தைச் சிறிது எழுதினோம். அது முடிந்த அந்தக்ஷணமே நமது வாக்கை வெளியிடக்குறித்து வருகையில், பத்திரிகை அதிபதி அது முன்னம் அச்சுண்ட விஷயமெனக்கடிந்து நம் பிடரியைப்பிடித்து நெட்டிக்குப்புறதள்ளினர். அடுத்த இரண்டொரு அயனவட்டம் மௌனம் சாதித்திருப்பாராஞல், அதை நாம் தொட்டு நின்ற விஷயம் வெளிவரலாம். அந்தப்பிடியைக் கைப்பிடியாகக் கொண்டு அந்த அறிக்கை அச்சுண்ட சஞ்சிகையை நமக்கு அனுப்பாதுவிட்டார் போலும். விட்டாலுமென்ன? இந்த நிகழும் அறிக்கையை நாம் அடையப்பெற்றது நாம் செய்த பாக்கியமே.

நம் பாரதகண்டம் அத்தனையிலும் சென்னை சமஸ்தான எல்லையில் சாஸ்திரகர்த்தாக்கள் மிஞ்ச உண்டென்பது பிரசித்தம்

இத்தனை பிரசித்தமுள்ள நம்நாட்டில் பிரம்ம நாட்டத்தைத்
தொட்டுச் சுட்டிக்காட்டும் பத்திரிகை இல்லாதொழிந்தது நி
... இப்பூமண்டலம் அத்தனையிலும் உண்மை பிரமமக்தி
...ள் இங்கு நிறைந்திருந்தும் நாம கிறிஸ்தவர்க்கு இடந்த
...பிரம்மநாட்டத்தை ஏனையவர்க்குச் சுட்டிக்காட்டாதி
...மல்லவே. இது சமயத்தில் அத்தி பூத்தது போ
...ான பத்திரிகை வெளிவந்து தோன்றிவிருத்தியா
...ந்து திங்களொருவட்டம் திரும்பியது, அய
...ன் றேடக்கேட்டு வெகு நாளாயும் அதை
...் இதுகாறும் கடிதமூலமாகவாவது அனு
... சுகிர்தமல்லவே.
...ான வேடம் தரித்த மாரீசர்கள் நம் நா
...வர நாம் மௌனம் சாதிப்பது என்ன
... ப்ரம்மவித்தியாவை அடிகொருமு
...னர் உள்ளத்தில்நம் வேதசாஸ்திர
...தொட்டவ... உண்டென்றும்,
...ப்பா... மென்றும் அறி
...து கிட்டு... உண்டெ
... நம் துறையில... டவர்
...நாட்டத்தைப் புக...
...ஒன்றே. இந்தப்பத்திரிகை அய
...ஓட இந்தக்ஷணமே இஷ்டர்கள்
...த்து பத்திராதிபர் முன்னே நின்று
...று உறுதியாய் நம்புகிறோம். எல்லாம்
...களுக்கு நாம் வருந்திப்பணிந்து நச்சு நச்
...த்தமென்ன? இல்லையே.
...களே வந்தனம். கொள்ளேகாலம் நேசன்.

ஈசுவரபோதம்.

...ளே,
...மாதத்திற்குமுன் சுவிசேஷபோதகர் கொள்ளே
...குந்து வித்தியாவகுப்புமண்டபத்தில் உயர்தரத்
... ஆகிய பலஜனரைக்கூட்டி கிறிஸ்துபோதம்
..., அதற்கு எதிர்பக்ஷத்தில் நாம்நின்றுபேசினதையு
...அதனிமித்தம் அவமானப்பட்டதையும் தொட்டுநீள
நினைந்து எழுதி பலரும் அறிய பிரசித்தம் செய்யும்படி சென்
னை சுதேச ட்ராக்ட்டு சங்கத்தின் தலைவர்க்கு அனுப்பியும் அது
பயன்படாது பிரேதலோகம் சேர்ந்ததை எண்ணி எண்ணி ம
னம்வாடி இளைத்துப்போனோம். இதுநிற்க, பிறகிட்டுசமீப
காலத்தில் நம்கொள்ளேகாலநாட்டில் விஷபேதியென்னும் படு
ரோகம் தலைப்பட்டு ஜனர்மனது மிகவருத்திவந்தது. அதைத்
தொலைவிக்குமாறு சுதேசர் தேவாராதனை முதலிய ஆடம்பரங்
களைச்செய்து வந்தார்கள். மகமமதியர்கள் தெருக்களில் வீதிக
ளில் வேதகீதம் பாடிவந்து நாட்டின் நான்குமூலையிலும் நின்று
தேவபிரார்த்தனைசெய்து வந்தார்கள். அந்த பிரார்த்தனை அ
ம்மட்டில் முடியவில்லை. அவர்கள் நூல்விதிப்படிக்கு இன்றள
வும் தெருக்களில் வேதகீதம்பாடி உலாவிவருகிறார்கள். இது
சமயத்தில், கிறிஸ்துமதபோதகர் ஒருவர் நடுவில் புகுந்து ஏனை
ய மதங்களில் சுகிர்தமில்லை என்றும் தம் சமயத்தில மோக்ஷ
த்தைத் தொட்டவழி உண்டென்றும், ஆகவே, அதில் அனைவ
ரும் மனம் செல்லவிட்டு அதில் புகுவது நலமென்றும் சபைந

டுவில் பேசிட்டால் பேசியது அத்தனையையும் அவலமாகக்
விக்க ஆடவர் காத்திருப்பதை எண்ணி கடைத்தெருவில் ஈ...
போதம் அறியாதவர்முன் பேச ஆரம்பித்தார். அவர் பே...
க்கேட்டுத் திடுக்கிட்டுநின்ற நாம், பேசிய நம் வாக்கைக் குலமக்
களும் தலைமக்களும் சற்றுச் செவிசாய்த்துக் கேட்கப் பிரார்த்
திக்கிறோம்:—

குலமக்களே!

பகலவனாகிய சூரியன் விழுந்த க்ஷணமே தினமும் மகம்
மதியர்கள் செவிக்கினிய வேத கீதம்பாடிக்கொண்டு வீதிகளில்
தெருக்களில் போவதை இங்கு கூடியிருக்கும் குலமக்கள் தலை
மக்கள் அத்தனைபெயரும் காதாரக் கேட்டிருப்பார்கள். பாடி
த்திரியுமவர்கள் நோக்கமென்ன? என்னவெனில், இந்த நாட்
டில் உலாவிவருகின்ற பீடைரோகம் மாதர்வயிற்றில் பிறந்த எ
வரையும் பற்றிப் பீடிக்காதிருக்கவேண்டுமென்று சமஸ்த உலக
ங்களையும் அவற்றினுள்ள சராசரங்களையும் சீர்த்தாழ்ச்சியின்றி
க கிரமமாய் ஆண்டு நடத்திவரும் ஞானமே திருவடிவாயுள்ள,
சுத்தசைதன்னிய வஸ்துவாகிய, சர்வாதிகாரியாகிய, சர்வசக்தி
யுள்ள அந்தரங்கமான பரம்பொருளாகிய, தேவ ஆவியாகிய,
அளவற்ற ஞானமும் ஜீவகாருண்யமுமுள்ள மகத்தான கடவு
ளானவனை, அதீதப்பொருளானவனை, இராஜபோகச் சுடரை,
...பரவஸ்துவை, பிரணவசொரூபனை முன்னிலையாகக்கொண்
டு கேட்...டுப் பிரார்த்திப்பதே. இந்தச் சுகிர்தவாக்கைப் பகவா
ன் கேட்டு...ன மிரங்கி அவரவர்கள் கேட்டபடிக்கு அந்த ரோக
ம் எவரையும் பி...த்துத் திண்டாட்டம் செய்யாவண்ணம் இரு
பைகூர்ந்து ரக்ஷிப்பா...ர். இதனால், நாம் என்ன அறிந்தோம்?
ஜீவராசி எதுவும் எதை... மனதார நெஞ்சுருகிக் கேட்ட...ோ,
அதை மண்டலம் விண்டல...ாகிய இரண்டிலும் உயர்த்தப்பட்
ட பகவான் கேட்டு மனதிரங்கி, அவர்கள் கேட்டதைத் தருகி
றார் என்று சித்தாந்தப்பட்டது. தெய்வபக்தியோ, மாதர்வ
யிற்றில் பிறந்தபிரஜைகளுள்ளத்தில் எவ்வளவும் சிதைவி
ன்றி இன்றளவும் உரங்கொண்டிருக்கின்றது. ஆகவே, அந்த
ஈசுரன் எவர்வாக்கையும் காதாரக்கேட்டு வருகிறாரென்பது நி
ச்சயம். இவ்வாறுகேட்டவர் (மதம்நிறைந்துள்ள)பலவகை
ப்பட்டமதபேதங்களின் விகற்பத்தைக்கண்டு வெறுப்புறாமல்,
ஏகதந்தமதவாதிகளும் அந்தந்தச்சமயமூலமாகத்தம்மைப் பி
ரார்த்திக்கிறார்களென்று தெரிந்து, வரம்கேட்டவர்கள் ஏமா
ந்து மனமுற மருகிநிற்கும் வண்ணம்மௌனம்சாதிக்கவில்
லை. அந்தந்தமதங்களில் அந்தந்தக் குறித்த ரூபமாக நின்று
அவரவர்களை ஏற்கெனக்காப்பாற்றி மோக்ஷம் தந்துவருகிறார்.
பலவித சமயங்களிலும் திட்பநுட்பமான தேவப்பிரார்த்தனை
கள உண்டு. இவ்வாறிருக்க, ஏனையவரைத்தள்ளி கிறிஸ்தவர்க
ள் சொல்லும் வசனங்களை அள்ளிக்கேட்டு, அவர்களுக்கு மாத்
திரம் சுகிர்தமும் மோக்ஷமும் ஈந்துவருகிறாரென்று ஸ்ரீதன ச
ம்பிரதாயத்தை நாட்டவந்த இகதிண்ணியர் சொல்லும் வா
ய் மொழிக்கு ஏற்ற ஆதாரமில்லை. ஐயோ, இது கேட்டு நாம்
கட்டகட்டைபோல் விரைந்து நின்றோம். இந்து சமயத்தில்
அத்துவைத மார்க்கமானது எந்தப்பர சமயத்தையும் தன்னு
ள் ஒடுக்கித்தானே மூதன்மையாக இருப்பதல்லாமல், அதுதா
னே அந்த மகத்தான பரம்பொருளாக விளங்குகின்றது. யாவ
ரும் அதைச்சொல்லாமலே உள்ளம்தேற அறிந்து நன்குமதிப்

பார்கள். தானே அதுவாக இருக்கின்ற சமயத்தை நாம் நம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல வைத்துக்கொண்டு ஒரு தலையாய்ப்பேசும் கிறிஸ்துமதவாதிகள் தம்மைப்புகழ்ந்து ஏனையவரை இகழ்ந்து பேசுவதை காதுபுளித்திடக்கேட்டு மனதின்வழியில் சென்று தரித்திருப்பது என்னமாயம். அதை இங்கு கூடியசபையார் ஆழ அகல சிந்திப்பார்களென்று மிக வினயத்துடன் பிரார்த்திக்கிறோம். இந்தக்கிறிஸ்துமதமானது நாம் பிறந்து வளர்ந்து ஆடவராய் நின்றபின் இங்குவந்ததா? இல்லை; நாம் பிறப்பதற்குச்சற்று மூந்தியே நம்முதாதைகள் காலந்தொட்டு நம் பரதகண்டத்தில் தோன்றியிருக்கின்றது. அது இந்துக்களை இரக்ஷித்ததுண்டோ, இல்லை. இந்து சமயத்தில் பாலமாணுக்கராகவும் விலங்குகளுக்கு ஒப்பான ஈசுரபோத மறியாத சாதாரண ஆடவராகவுமுள்ளவரைப்பீடித்துவருகின்றதே ஒழிய, நம் நாட்டின் வேதசாஸ்திரங்களின் உண்மையை அறிந்தவர்பக்கமும் திரும்பிடில் வீசும் அக்கினிச்சுவாலை, தன்னைச்சிதைவிக்குமென்று ஒதுங்கி மூலை ஒடுங்கியது. நல்லது, அதில் சேர்ந்தவர்கள் யார்? இழிகுலத்தோரில் ஜீவனத்தசை அற்று ஏமாந்திருந்தவர்களும் காம விகாரத்தில் கண்டஞ்சடைந்து பெண் ஆசைஎன்னும்பைசாசின்வசப்பட்டு நல்லபெண் கிடைக்கிராளென்று அவலமாக ஓடும் மத்தியம நிலைமையோரும் அதில்சேர்ந்தார்கள். சேர்ந்தவரில் சிலர் காலக்கிரமத்தில் நம் இந்துசமயத்தை எட்டிப்பார்த்து, அதில் பரலோகத்தை நாடிய சுகிர்தவழி உண்டென்று கண்டு தாம் அதைத்தொலைத்து அந்தமார்க்கத்தைச் சற்றும் தொடாத கிறிஸ்துசமயத்திற் புகுந்ததற்குப்பலமுறையும் மனஸ்தாபப்பட்டதை நாம் காதாற்கேட்டது நிஜம். ஏனையமதவாதிகள் இந்துமதத்திற் சேர்ந்திட இதில் வழிகாட்டா தொழிந்தது பரிதாபந்தான்; ஆனாலும், இதைப்பற்றிச் சென்னை சமஸ்தானத்தில் சமீபகாலந்தொட்டு வாக்குப்பிறந்தது உலாவி வருவதனால், அந்த விதி ஒன்று கூடியசீக்கிரத்தில் ஏற்படலாமென்று நம்புகிறோம். இதனாற் கிறிஸ்து சமயம் வெகு காலந்தொட்டு இங்கு குடிகொண்டும் அதனால் எந்த சுதேசியும் சுகிர்தமடையக்காணோம் எனக்கண்டோம். ஆகவே, அத்துவைதத்தின் சுவாலைமயமாக உள்ள இந்துமத ஞானிகள் கிறிஸ்தவர்கள் பேசும் வாக்கை சிந்தாப்பூர்வமாய்க் கேட்டு மலைவுறாமல், ஒப்பு உயர்வில்லாததம் தமது சமயத்தின்மயமாக இருந்து ஏனையவர் சொல்வதை ஏளனமாகக்கேட்டுதம் தமது சொல்லரிய கொள்கையை கைசோரவிடாது ஏனையவர் சொல்லை தருமமெனவும் மதியாதிருக்க இதயப் பூர்வமாய் மிகத்தாழ்ந்து வருந்திப்பணிந்து கேட்டுக்கொள்ளுகிறோம். இஷ்டர்கள் அதை அவ்வாறு பதரெனத் தள்ளுவார்களானால் பரமதஸ்தர்கள் செவிடன் காதில் சாளம் ஊதியதுபோல சொல்லிச்சொல்லி வீணாவதொழிய வேறுபயனென்ன? சமயங்கள் அத்தனையும் மதலைவாக்குள்ளவைகளென்றும், கிறிஸ்துசமயம்மட்டும் தேவசமயமென்றும்நாம் இதுவரையில்கேட்ட தொனி அத்தனையும் நாம்சிறிதும்பாராட்டாமலும் திரணமும் பொருள்செய்யாமலும் பதரெனத்தள்ளினோம். அந்தவாக்குநமக்குச் சிரமிக்கவில்லை. பதினாறுதிக்கிலுமுள்ளசமயங்களில்எதிலாகிலும்ஒன்றிலிருந்துதெய்வத்தைநாடிநிற்கும்பிரஜைகள் பக்தியை கெடுக்கவந்து பேசும் நா, நாசமுறக்கடவதாக. நக்ஷத்திரக்கூட்டத்தில் நடுநாயகமாக விளங்கும் சந்திரனைப்போல,நம் சபைமுன்னே நடுநாயகமாகத்தோன்றி பேசியஇந்த சீமோன்வாக்குக்கு எதிர்வாக்குப் பேசிய நம் அபசாரத்தை க்ஷமிக்கப்பிரார்த்திக்கிறோம். முன்னம் ஒருமுறை நாம் சுகிர்தமெனும் பீடத்தினின்று பேசிய பொழுது உண்டாய்விளைந்த திண்டாட்டத்தை எண்ணி எண்ணி ஏழைநெஞ்சம் திடுக்கிட்டு க்ஷமிக்கக்கேட்டதன்றி மற்றபடி அல்ல. சமயபேதங்கள் பலவற்றையும் ஆராய்ந்து, அகலஆழநினைந்து தாராதரம்அறிந்த இந்துசமயவாதிகள் எவரும் நாம்பேசியது அபசாரமென்றுஎண்ணமிடார். ஆகவே, இங்கு இந்த சமயத்தில் கிறிஸ்துபோதகர்முன்னிலையில் நிற்கும் குலமக்கள் அத்தனைபெயரும் இதுவரையில் கேட்டதெல்லாம் பதரெனத்தள்ளித்திடமான இவ்விடம்விட்டு ஏகி தம்தம்கருமம்பார்த்து சுகிக்க மிகப்பணிந்து கேட்டுக்கொள்ளுகிறோம். இவ்வாறு நாம் இரண்டொருமுறைசெய்திடுவோமானால், அந்த போதகர் ஏமாந்துநம் நாட்டில் தம்நூதன சாம்பிரதாயத்தை நாட்டாது விலகுவர்.

இஷ்டர்களே அநேகவந்தனம்.

கொள்ளேகாலம் கேசன்.

ஹிந்துசபை

ப்ரம்மவித்தியா பத்திராதிபர் அவர்களுக்கு

பத்திரிகை இலக்கம் 6.ல் கண்டபடி பாஷண்டமதங்களைத் தொலைத்து ஹிந்து மடத்தாரை அவர் கடமைப்படி மதஸ்தாபனைசெய்யச்சொல்லி, பஞ்சமரையும் ஆதரித்து' மதாபிமானசபைகள் சேர்த்து, வேதவேதாந்தவிசாரங்களைப்பெருக்கி' வைதீகர்களையும் பண்டிதர்களையும் ஜோதிஷர்களையும்யோகநிஷ்டர்களையும் மானித்து, "வர்ணாசிரமாசாரவதாள ,, என்கிற ஹிந்துக்களைசுகத்தில் இருத்தவேணுமென்கிறகருத்துடன் 1880ம் வருஷத்தில் ஹிந்துசபை என்று' மூலசபை ஒன்று ஏற்படுத்தினேன், அங்கங்கே சாகை சபைகளும் ஏற்பட்டிருக்கிறது. கேட்டுத்தெரிந்துகொள்ள லௌகிகர்களுக்கு அவகாசமில்லாமல் நிர்மானிக்க அவகாசமில்லை. மடங்களிலும் ராஜசபைகளிலும் திருப்பதி திருவல்லிக்கேணி முதலான பரிஷைகளிலும் தேறின வைதீகசாஸ்திரிகள்கூடி தீர்மானித்தால்தான் தீர்மானம். ஸ்மார்த்த வைஷ்ணவ மாத்வ கக்ஷிகளுக்குள் பக்ஷாபக்ஷம்ஹிந்துசபைக்காரர் ஆலோசிப்பதில்லை. பொதுநிலைமையுள்ள இச்சபையை பத்திரிகைமூலமாய்வெளியிட்டேன்.

சங்கர அய்யா

திருச்சூர்-

சிதம்பரம்

ஜீவகாருண்ணிய நிரந்தர கஞ்சித்தொட்டி யாசகதர்மம்.

இத்தருமம் இம் மார்கழிமீ ௮-வ முதல் ஆரம்பிக்கப்பட்டுச் செவ்வையாகநடந்துவருகிறது. இதன் உத்தேசம் வேலை செய்ய சக்தியற்ற கூன், குருடு, முடம் முதலிய ஜனங்களைக் கஞ்சி வார்த்து ரக்ஷிக்கவேண்டுமென்பதே. இது ஒரு பெரிய காரியமாயினும், தீனர்களிடம் தயவுள்ள கனவான்கள் உதவியிருந்தால் நிலைபெறுமென்பதற்கு ஐயமில்லை. உதவிசெய்ய விருப்பமுள்ளவர்கள் நெல், கம்பு, கேழ்வரகு, சோளம் முதலிய தானியங்களாகவாயினும், திரவியமாகவாயினும் சகாயஞ்செய்யப் பிரார்த்திக்கிறேன்.

C. S. நரசமீயர்,

கஞ்சித்தொட்டி யாசகர்

சிதம்பரம்.

அறிவிப்பு.
இந்து டிராக்ட்ஸொஸைட்டி.

தாய் தந்தைகள் நெடுநாள் அருந்தவம்புரிந்து பெற்றெடுத்த பிள்ளைகளைப் பாதிரிகள் துர்ப்போதனைசெய்து வெகு சுலபமாய்க்கிறிஸ்தவராககின்றதைத் தடுக்கும் பொருட்டும், இந்துமதாபிவிர்த்தி செய்யும்பொருட்டும் 1887 ஹு ஏப்ரல்மீ 27உ சென்னையில் இந்து டிராக்ட் ஸொஸைட்டியென ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதில் மெம்பராகச்சேர விருப்பமுள்ள உள்ளூரார்க்கும் வெளியூரார்க்கும் குறைந்தது சந்தா 1-4-0 இச்சங்கத்துக்குத் தருமமாகப் பொருளளிப்போர் அளிக்கலாம். இச்சங்கம் திரவியசகாயம் செய்யும் தாதாக்கள் கைகளையே நோககுகின்றது. இந்துமதாபிமானிகள் ஒவ்வொருவரும் இதை ஆதரிக்கவேண்டும். இச்சங்கத்தில் தற்காலம் ஒவ்வொருதடவைக்கும் பதினாயிரம் வீதம் சிறு பத்திரங்கள் அச்சடித்து மெம்பர்களுக்கனுப்புவதோடு, கிறிஸ்தவரால் உபத்திரவ மூண்டாகும் பலவூர்களிலும் அனுப்பி, இலவசமாகப் பரவச்செய்யப்படுகின்றன. இன்னும் அனேக காரியங்கள் செய்யவேண்டும். யாவும் பொருளாலேயே ஆகவேண்டுமென அறிந்தவிஷயமே. இதற்காக இந்து டிராக்ட் ஸொஸைட்டி தருமமென இங்கிலீஷ், தமிழ் தெலுங்கு இம்மூன்று பாஷைகளும் சேர்தது அச்சிட்டு, ஸ்டாம்புடனே புத்தகங்கள் வெளிப்பட்டிருக்கின்றன. அதில் இஷ்டமான தொகை கையொப்பமிட்டு, பொக்கிஷதார் கையெழுதகிட்ட ரசீதினபேரில் ஏஜெண்டுகளிடத்திலாவது, பில்கலெக்டரிடத்திலாவது பணம் கொடுக்கவேண்டியது. மற்றப்படி யாரிடத்திலும் பணம் தரப்படாது.

இச்சங்கத்தைப்பற்றி யாதேனுமறிய விரும்புவோர் அரை அணு லேபிலாவது ரிப்ளைகார்ட்டாவது அனுப்பவேண்டியது.

கஅஅஎ ஹு நவம்பர் மீ 30உ சென்னை

இங்ஙனம்
பொன்னரங்கபிள்ளை.
ஷை சங்கத்தின
அக்கிராசனதிபதி.

அறிவிப்பு
சர்வதாரிவருஷத்து
ரிப்பன் தமிழ்ப்பாக்கெட்
பஞ்சாங்கம்-

இப்பஞ்சாங்கம் 1888 ஹு மார்ச்சு மூ 15 உ க்குள் வெளிவரும்.

புத்தகம்1 இ விலை அணு 6. தபால்பாகிங்சார்ஜ் அணு 1
10 இ ஒன்றும் 25 இ 3. ம் 50 இ 7. ம் 100 இ 15 ம். அதிகமாகக்கொடுக்கப்படும்.

பிப்ரவரி மீ 10 உ க்குள் முன்பணம் அனுப்புவோர்க்கு 100 இ 20 புஸ்தகம் அதிகமாகக்கொடுக்கப்படும்.

இங்ஙனம்
சை இரத்தினசெட்டியார்.
புரோப்ரயிட்டர்
மதராஸ் ரிப்டன் பிரெஸ்
316. தம்புசெட்டிவீதி.
சென்னை.

உ
சிதம்பரம்
ப்ரம்மவித்தியா யந்திரசாலையில்
விற்கப்படும்புத்தகம்

ஸம்ஸ்கிருதம் கிரந்த எழுத்தில்.	ரூ	அ	பை
சிவதத்துவவிவேகம்	உ	,,	,,
மத்வமதவித்வம்சனம்	,,	கஉ	,,
ப்ரம்மதர்க்கஸ்தவம்	,,	அ	,,
சாமருத்திரசம்ஹிதாபாஷ்யம்	,,	அ	,,
சௌமியசோமநாடகம்	,,	ரு	,,
ஸ்ரீராமபத்திரவிஜயம்	,,	அ	,,
விசாகதுலாபாரபிரபந்தம்	,,	க	சா
பிரஸ்னோத்தரராமாயணம்	,,	ரு	,,
சூரயபூ நாடகம்			
தோத்திரசங்கிரகம்	,,	உ	,,
மகேஸ்வரதண்டகம்	,,	க	,,
ஆரியாதண்டகம் / லக்ஷிமிஸ்தோத்திரம். }	,,	க	,,
சம்ஸ்கிருதம் தெலுங்கு எழுத்தில்			
சர்மிஷ்டாவிஜயம	,,	சா	,,
இராமாயணவினாவிடை	,,	௩	,,
சிதம்பரமஹாத்மியம்	,,	க0	,,
தேவநாகர லிபி			
ஆதிசங்கிரகம்	,,	க	,,
விசாகநக்ஷத்திரமாலிகை	,,	,,	சா
தமிழ்			
சீகாழித்தலபுராணம்	,,	அ	,,
வேளூர்ப்புராணம	,,	சா	,,
கந்தபுராணநவநீதம்.	,,	கஉ	,,
பஞ்சதசோபநிஷத்து	க	உ	,,
வாசுதேவமனனம்	,,	சா	,,
அஷ்டாங்கயோகம்	,,	ரு	,,
மாதர்நிதி	,,	சா	,,
மனுமுறைகண்டவாசகம்	,,	ச	,,
ஜனோபகாரம்	,,	க	,,
கிறிஸ்துமதகண்டனம்	,,	க	,,
யேசுக்கிறிஸ்து மனிதனே	,,	,,	சா
சங்கரசரித்திரம	,,	,,	சா
நீதிக்கீர்த்தனை	,,	க	சா
ஆன்மாவும் சரீரமும்	,,	க	,,
சன்மார்க்கபோதனி	,,	,,	சா
கல்விக்களஞ்சியம் நெ. க (கடன்பட்டகந்தன் சரித்திரம்) }	,,	,,	சா
கல்விக்களஞ்சியம் நெ- உ (புருஷத்துவேஷபூதகி சரித்திரம்) }		,,	சா
சிவனுந் தேவனு என்னுந் தீய நாவுக்கு ஆப்பு. }	,,	,,	சா